Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00




தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆனி 13 புதன்கிழமை (27.06.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 270
















# முறிகண்டியில் மீள்குடியேற்றம் தடையின்றித் தொடரும்

## முல்லை அரச அதிபர் அறிவிப்பு



(முல்லைத்தீவு)

திருமுறிகண்டி பகுதி மக்களை அவர்களது சொந்த. இடங்களில் குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் தொடர்கின்றன என்றும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாகவோ அல்லது அவர்களை நிர்ப்பந்திக்கும் வகையிலோ இதுவரை எந்த நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

இப்பகுதி மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணிகளைப் பெற்றக்கொடுப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தடையின்றி தொடருமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

திருமுறிகண்டியில் மீள்குடியேறுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டு பாடசாலையொன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தாக்குதல் நடத்தி அம்மக்களை பலவந்தமான முறையில் மெனிக்பாம் முகாமுக்கு.

19 ஆம் பக்கம் பார்க்க

## கணினிமயமாகிறது வாக்காளர் பட்டியல்

(கொழும்பு)

வாக்காளர் பெயர்ப்பட்டியல்களை கணினிமயப்படுத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் திட்டமிட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை கணினி மயப்படுத்தவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார்.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் இந்த நடவடிக்கைகளை நிறைவுசெய்ய

19 ஆம் பக்கம் பார்க்க

## பணிப்பாளரை பதவி நீக்க ஆதரவு வலுவடைகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் தற்போதைய பணிப்பாளரை குறித்த பதவியிலிருந்து நீக்குமாறு யாழ். மருத்துவ சங்கம் கையெழுத்து வேட்டையை செய்திருந்தது. இதற்கு மருத்துவத்துறை வட்டாரத்தில் அமோக ஆதரவு கிடைத்திருப்பதாக யாழ். மருத்துவ சங்க பிரதிநிதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வைத்திய நிபுணர்களில் பல்கலைக் கழக வைத்திய நிபுணர்கள் 6 பேர் தவிர ஏனைய 28 பேரில் 25 பேரும் வைத்தியர்கள் 203 பேரும் தீர்மானத்திற்கு ஆதரவாக கையெழுத்திட்டிருந்ததாகவும் பல் மருத்துவ சங்கம், தாதியர் சங்கங்கள், மருத்துவமனை சிற்றூழியர் சங்கம் ஆகியனவும் தனித்தனியே தீர்மானத்திற்கான தமது ஆதரவினைத் தெரிவித்து சுகாதார அமைச்சருக்கு கடிதங்கள் அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தமது ஆதரவினைத் திரட்டிய

19 ஆம் பக்கம் பார்க்க

## பரிந்துரைகளை அமுலாக்க நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கத்திற்கான இடைக்கால செயற்பாடு அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது என்றும் இதன் முன்னோடியாக ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட விசேட செயலணி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

இவ்விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வொஷிங்டனுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தானோ வெளிவிவகார அமைச்சரோ எந்தவொரு ஆவணத்தையும் அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கவில்லை என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உறுதியாகத் தெரிவித்தார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அமுலாக்குவது பற்றிய



எந்தவொரு ஆவணத்தையும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனிடம் சமர்ப்பிக்கவில்லை என்றும் கூறினார். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் எவற்றுக்கு முக்கியத்துவமளித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## தீயில் எரிந்த இளம்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் பெண் ஒருவர் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

.புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த தவராசா தர்சிகா (வயது - 18) என்ற இளம் பெண்ணே இவ்வாறு மரணமானார். குறித்த பெண் கடந்த ஞாயிறறுக்கிழமை தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி

19 ஆம் பக்கம் பார்க்க

## தனியார் சொத்துக்கள் உரியவர்களிடம் கையளிக்கப்படும்

(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தின் பொறுப்பிலிருந்த 50 வீதமான வீடுகள் ஏற்கனவே உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள 400 வீடுகளையும் விரைவில் கையளிக்கவுள்ளதாக யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

வடக்கிலுள்ள பொது மக்களின் காணிகளை பலாத்காரமாக வைத்திருக்க வேண்டிய எந்த ஒரு தேவைகளும் இராணுவத்திற்கு இல்லை என்று தெரிவித்த மகிந்த ஹத்துருசிங்க, அவ்வாறு கூறப்படும் செய்திகள் தவறானது என்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கலைஞர்களுக்கு வட்டியில்லாக் கடன்

(கொழும்பு)

சிரேஷ்ட கலைஞர்களுக்கு வாகனம் கொள்வனவிற்காக வட்டியில்லாக் கடன் பெற்றுக்கொடுப்பதற்கு விண்ணப்பப்படிவங்கள் அடுத்த மாதம் தொடக்கம் கலை மற்றும் கலாசார அமைச்சினால் கோரப்படவுள்ளன.

கலைஞர்களுக்கு ரூபா 12 இலட்சத்தினை வட்டியில்லா கடனாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் 18 வருடங்களுக்கு மேல் கலைத்துறையில் உள்ள கலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலை, இசை நடன பொம்மலாட்ட நாடகத் தயாரிப்பாளர்கள், ஓவிய, சிற்ப புகைப்படபிடிப்பாளர்கள், தொலைக்காட்சி ஆகிய துறைகளில் உள்ள கலைஞர்களுக்கு இக்கடனுதவி வழங்கப்படவுள்ளது.

இக்கடன் திட்டம்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணிகளின் உரிமம் உறுதிப்படுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் ஊடாககாணிகளை பெற்றுக்கொண்டவர்கள் தமது காணிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட காணி சீர்திருத்த அதிகார சபையின் பணிப்பாளர் என்.விமலராஜ் தெரிவித்தார்.

72 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் ஒரு நபர் 25 ஏக்கர் விவசாய நிலத்தினையும், 50 ஏக்கர் மேட்டு நிலத்தினையும் வைத்துக் கொள்வதற்கு அதிகாரமுண்டு.

அதற்கு மேல் வைத்திருந்தால் காணி சீர்திருத்த ஆணைக் குழுவினால் சுவீகரிப்பதற்கான அதிகாரம் உண்டு.

கடந்த யுத்த காலத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழு இயங்காமல் இருந்த வேளையில் குறித்த காணிகளை மக்கள் கைப்பற்றியுள்ளதாகவும் அக்காணிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். காணி பெற்றுக்கொண்டவர்களின் தொழில், காணியின் பெறுமதி போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு அவற்றை உரியவர்களுக்கு கையளிக்கவுள்ளதாகவும், சட்டரீதியாக காணிகளை

19 ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் குடிசைகள் தீக்கிரை

முல்லைத்தீவு - அலம்பில் - தங்கபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 4 குடிசைகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன. இத்தீ விபத்தில் எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

குறித்த பகுதியில் வசிக்கும் ஒருவர் சூழலை சுத்தப்படுத்தி குப்பைகளை எரிக்க தீ மூட்டிய போது அத்தீ குடிசைகளுக்கும் பரவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீள்குடியேறிய தீவக மக்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படும்




(வேலணை)

தீவுப்பகுதியில் மீள்குடியே றிய மக்களுக்கு இலவச மின் இண்ணப்புக்கள் வழங்கப்படும் இதற்கிடையில் பணம் செலுத்தி மின்சாரத்தைப் பெற மக்கள் முயற்சிக்கத் தேவையில்லை. அவ்வாறான செயற்பாட்டை மின சார சபையினர் ஊக்குவிக்க வேண்டும் என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தீவகப் பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுத்தலைவரும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப் பினருமான சில்வேஸ்திரி அலன் ரின் (உதயன்) தலைமையில் ஊர்காவற்துறை பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள் தொட ர்பான ஆய்வுக் கலந்துரையாட லில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் யுத்தத்தின் பின் மீள்குடியேற்றம் நடைபெற்று வரும் தீவகப் பகுதிகளில் வடக் கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின் இணைப்புக்கள் வழங்கப் படுகின்றன. மக்கள் கொடுத்த விண் ணப்பங்களின் அடிப்படையில் பாவனை இணைப்புக்களும் வழங்கப்படும். இதற்கிடையில் சிலர் அரச நடைமுறைக்கு மாறாக பணத்தை செலுத்தி மின்சாரத் தினை பெற முயற்சிக்கின்றனர். இதற்கு மின்சார சபையினர் இணங்காமல் அரச நடைமுறை களை கடைப்பிடித்து நடக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

அத்தோடு நடைமுறையில் உள்ள மின்விநியோகத்திற்கான வேலைத்திட்டங்களை வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் நிறை வேற்றுமாறு பணிப்புரை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர குமார் ஏனைய பகுதிகளுக்கும் மின்சாரத்தினை வழங்குவதற் கான பணியை தொடர்ந்து செயற் படுத்துமாறும் துறைசார்ந்த அதிகாரிகளை பணித்தார்.

தீவகமக்களின் நன்மை கருதி அப்பகுதிகளிலும் வைத்தியர்கள் சென்று கடமையாற்ற வேண்டு மெனவும் இதற்காக நேர்த்தி யான பொறிமுறை ஒன்று கையா ளப்பட வேண்டுமெனவும் தெரி வித்தார். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலை யில் கடற்றொழிலில் ஈடுபடுபவர் களுக்கான பாஸ் வழங்கும் செயற்பாடு நாடளாவிய ரீதியில் இல்லை எனவும் ஜனாதிபதி இந்நடைமுறையை நீக்க உத்தர விட்டுள்ளார். எனவே தீவகத் திலும் இச்செயற்பாடு நீக்கப்பட வேண்டுமென கடற்படையினரி டம் கேட்டுக்கொண்டார். மேலும் நடைபெற்றுவரும் தனியார் மற் றும் அரச பேருந்து சேவைகளின் பயனை மக்கள் சீராக பெறுவ தற்காக இருதரப்பினரும் ஓர் இணக்கப்பாட்டுக்குவந்து மக்க ளுக்கு நன்மையளிக்கும் வகை யில் சேவையாற்ற முன்வர வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதேவேளை தீவக மக்களு க்கு சீரான குடிநீர் விநியோகத் தினை வழங்க அரசாங்கம் திட் டங்களை வகுத்துள்ளதெனவும் அத்திட்டங்கள் நடைமுறைக்கு வரும்வரை தற்போது நடை முறையில் உள்ள திட்டத்தை சீராக மேற்கொள்ளுமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரைக் கேட்டுக் கொண் டார். தொடர்ந்து இக்கலந்துரை யாடலில் வீதி, கால்நடை வளர் ப்பு சட்டம் பாதுகாப்பு விவசாயம், கடற்தொழில் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் மேலும் பல பிரச்சினைகள் தொட ர்பாகவும் விரிவாக ஆராயப் பட்டு தீர்வுகளும் எட்டப்பட்டன.

இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி. பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பா ளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஊர்காவற்றுறை பிரதேச செயலர் எழிலரசி வேலணை, பிரதேச செய லர் மஞ்சுளாதேவி, நெடுந்தீவு பிர தேச செயலர் சிறீ ஆகியோரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ஜெயகாந்தன், வேலணை பிரதேச சபைத் தலைவர் சிவராசா நெடுந்தீவு பிரதேச சபைத்தலை வர் றெக்சியன் ஆகியோரும் ஊர் காவற்றுறை, வேலணை, நெடு ந்தீவு ஆகிய பிரதேச செயலகங் களை பிரதிநிதித்துவப்படுத்தும் துறைசார்ந்த திணைக்களங்கள் மற்றும் சபைகள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் கிராமமட்ட அமைப்புக்களின் தலைவர்களும் பங்கு கொண்டனர். (85)

# வெளிநாட்டு புலமைப் பரிசில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கையிலுள்ள கல்விவல யங்கள், கோட்டக்கல்வி அலு வலகங்களில் பதவிநிலை உத்தி யோகத்தர்களாகக் கடமைபுரியும் உத்தியோகத்தர்களிடமிருந்து புலமைப் பரிசில் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி நிர்வாகம், கல்வி முகாமை, நிதிமுகாமை தொடர்பா கவே இந்தக் கற்கை நெறிகள் வழங்கப்படவுள்ளன. இந்தியா, சீனா, மலேசியா, முதலிய நாடு களில் இந்தக் கற்கைநெறிகளை மேற்கொள்வதற்காகவே இந்தப் புலமைப் பரிசில் திட்டம் வழங்க வுள்ளது. இதற்கான விண்ணப்பப படிவங்களை வலயக்கல்விப் பணி மனைகளில் பெற்று இம் மாத இறுதிக்குள் விண்ணப்பிக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை வலயக் கல்விப் பணிமனையின் விளம்ப ரப் பலகையில் கண்டுகொள்ள லாம். (06)


'தமிழ் இதழியல் வரலாறு'
e-Exhibition

தமிழர்களின் தகவல் பரிமாற்றத்தின் பாரம்பரியங்களையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் முகமாக 'தமிழ் இதழியல் வரலாறு' எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான கண்காட்சி.

இடம் :- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம் :- 28,29/06/2012 வியாழன் மற்றும் வெள்ளி
காலை 09.00 முதல் பிற்பகல் 2.00 வரை
பிரதம விருந்தினர் :- பேராசிரியர். வசந்தி அரசரட்ணம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
சிறப்பு விருந்தினர் :- திரு.முத்து.ராதாகிருஷ்ணன்
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
வட மாகாணம்.
தலைமை :- திரு.அ.அகிலதாஸ்
அதிபர்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்களும், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஊடக கழக மாணவர்களும் இணைந்து ஒழுங்கமைத்து நடாத்துகின்றனர்.

MRTC
ஒழுங்கமைப்பு

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (MRTC)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இல. 84 ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல:- 021 222 9873

(C/1606)


# கொக்குவில் இந்துவில் தமிழ் இதழியல் வரலாறு இருநாள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்கள் கொக குவில் இந்துக் கல்லூரி ஊடகக் கற்கை மாணவர்களுடன் இணை ந்து நடத்தும் "தமிழ் இதழியல் வரலாறு" என்ற தொனிப்பொரு ளிலான கண்காட்சி நாளை வியாழன், மறுநாள் வெள்ளிக் கிழமை ஆகிய இரு நாட்களும் முற்பகல் 9 மணி முதல் பிற் பகல் 2 மணி வரை கொக்கு வில் இந்துக் கல்லூரி சுப்பிரம ணியம் மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

கொக்குவில் இந்து அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக் கண்காட்சியில் அச்சுக் கலையின் வளர்ச்சி, இலங்கை யின் தமிழ் பத்திரிகைகளின் வர லாறு, யாழ். பிராந்திய பத்திரி கைகளின் வரலாறு, இலங்கை யின் அச்சு இயந்திரங்களின் வளர் ச்சி, பத்திரிகை நிறுவனத்தின் கட்டமைப்பு என்பன குறித்த விளக்கங்கள் இடம்பெறவுள்ளன.

உலக தமிழ் பத்திரிகைகள், தமிழ் சஞ்சிகைகள், புதிய ஊடகத்தில் தமிழ்பத்திரிகை வடி வங்கள், புகைப்பட கருவி கள், புகைப்பட வரலாறு என்பனவும் வீடியோ காட்சிகளாக பதிவு செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட வுள்ளன.

மேலும் மூத்த ஊடகவியலா ளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோரின் கருத்துரைகள் காணொளிகளாக காட்சிப்படுத் தப்படவுள்ளன. இக்கண்காட் சியில் சிறப்புக் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

கண்காட்சியின் முதல் நாளான நாளை மதியம் 12 மணி க்கு "வெகுஜன ஊடகக் கலா சாரம்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக ஊடக பிரிவு விரிவுரையாளர் செல்வி த.கிருத் திகா கருத்துரை வழங்கவுள் ளார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை "புதிய ஊடகத்தில் பத்திரிகை யியல்" என்ற தலைப்பில் முற்ப கல் 9 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குனர் தே.தேவானந் கருத்துரை வழங் குவார். தொடர்ந்து அன்று மதியம் 12 மணிக்கு "ஆங்கிலக் கல்வியும் தமிழ் பத்திரிகை வளர்ச்சியும" என்ற தலைப்பில் முன்னாள் பேராயர்.அருட் கலா நிதி. ஜெபநேசனின் கருத்துரை இடமபெறவுள்ளது.

# இளம்பெண்ணுடன் வன்புணர்வு; மூன்று இளைஞர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புகையிரத நிலையப் பகுதியில் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத் திய மூன்று இளைஞர்களை எதிர்வரும் ஆறாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா நேற்று முன்தி னம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவ த்தில் பாதிக்கப்பட்ட பெண் யாழ். பொலிஸில் மேற்கொண்ட முறை ப்பாட்டை அடுத்து குறித்த மூன்று இளைஞர்களும் கைதுசெய் யப்பட்டு கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிமன்றத்தில் முற்படுத் தினர். இதன்போது சம்பவத்தை விசாரித்த நீதவான் மா.கணேச ராசா மூவரையும் எதிர்வரும் ஆறாம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட் டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் குற்றம் புரிந்த மூவரில் ஒருவர் 20 வயது டையவர் மற்றையவர் இருவ ரும் அதற்குக் கீழ் வயதுடைய வர்கள் என்பது குறிப்பிடத்தக் கது. (பா)

# கந்தர்மடத்தில் கோஷ்டி மோதல் மூன்று பேருக்கு எதிராக வழக்கு

நல்லூர் கந்தர்மடம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோஷ்டி மோதலில் வாள்வெட் டில் ஈடுபட்ட மூன்று இளைஞர் களை யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா எதிர்வ ரும் 28 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மூன்று பேரைக் கைதுசெய்த யாழ். பொலிஸார் அவர்கள் மூவ ரையும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவர் களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு அவர் உத்தரவிட்டார்.

இதில் நாவாந்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் கந் தர்மடத்தைச் சேர்ந்த இருவரும் அடங்குவதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (பா)

# சித்திரத் தேர் அமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் ஆயி லடி வீரகத்தி விநாயகர் ஆலய த்திற்கான புதிய சித்திரத்தேர் அமைக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. 12.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட வுள்ள இச் சித்திரத்தேர் எதிர்வ ரும் யூலை 21 ஆம் திகதி வெள் ளோட்டம் விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# மின்தடை பற்றிய தகவல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டி ருந்த மின்தடை பற்றிய செய்தி யில் குறிப்பிட்டிருந்த இடங்களு க்கு மேலதிகமாக வீதி அகலிப் புப் பணிகளுக்காக உயர் அழு த்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இட மாற்றம் செய்யவேண்டியிருப்ப தால் 28.06.2012 வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் உரும பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ். நகரம் முழுவ தும் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# வாக்காளர் இடாப்பு படிவம் பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு

## யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளும் முகமாக கிராம சேவையாளர்களினால் வழங்கப்படும் வாக்காளர் இடாப்பு (வி.சி) படிவங்களைப் பூரணப்படுத்துவது தொடர்பில் பொது மக்களினால் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தகவல் தருகையில், யாழ். மாவட்டத்தில் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அவ்வவ் கிராம அலுவலர்களினால் வாக்காளர் இடாப்பு படிவங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இப்படிவங்களை பூரணப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவே பொது மக்களினால் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இம்முறைப்பாடுகள் குறித்து தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் பொதுமக்கள் படிவம் குறித்த எந்த முறைப்பாடுகளையும் 0212222655 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும். அத்துடன் எழுத்து மூலமான முறைப்பாட்டை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்க முடியும்.

எழுத்து மூலமான முறைப்பாட்டுக் கடிதம் ஆதாரமாக இருப்பதால் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முறைப்பாட்டைத்தெரிவிக்கும் பட்சத்தில் அம முறைப்பாட்டை எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் இம்முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றபின்னர் அந்தநத கிராம சேவையாளர் பிரதேச செயலருடன் கலந்துரையாடி இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்)

# மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ற்ரன் கல்லூரியில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர், இலங்கை வங்கி கிளை முகாமையாளர் சிவகுமாரன் சிறப்பு விருந்தினர்களாக சுப்பிரமணியம் வித்தியாசாலை அதிபர் திருமதி. அ.கௌரியம்பாள், வர்த்தகர் க.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கல்லூரி அதிபர், சிரேஷ்ட மாணவத் தலைவர் செல்வன் கஜேந்திரன், உதவி சிரேஷ்ட மாணவத் தலைவன் செல்வன் குகராஜ் ஆகியோருக்கு சின்னங்களைச் சூட்டினார். கல்லூரியின் ஆரம்ப பிரிவான கோவிந்தர் பாடசாலை அதிபர் திருமதி செல்வராஜா சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி தரங்கினி, உதவி சிரேஷ்ட மாணவத் தலைவி கிருஷா ஆகியோருக்கு சின்னங்களைச் சூட்டினர். (10)

# பூநகரி சுகாதார அலுவலகங்களின் புனரமைப்பு குறித்து நேரில் ஆய்வு



(கிளிநொச்சி)

பூநகரி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும வைத்தியசாலை, சுகாதார அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளை தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி ரட்ணாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுனர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் பார்வையிட்டனர்.

எயிட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா நோய்களுக்கு எதிரான உலக நிதியத்தின் 22 மில்லியன் ரூபா நிதியுதவியின் கீழ் வெளிநோயாளர் பிரிவும், யு.எஸ். எயிட் நிறுவனத்தின் 50 மில்லியன் ரூபா நிதியுதவியின் கீழ் நோயாளர் விடுதியும், யுனிசெவ் நிறுவனத்தின் 20 மில்லியன் ரூபா நிதியுதவியின் கீழ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 6 மில்லியன் ரூபா செலவில் வைத்தியர்கள் விடுதியும் பூநகரி பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.மோகனதேவன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ப. கார்த்திகேயன் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் இதில் கலந்துகொண்டனர்.

## விதை இனங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

திவிநெகும திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத்திட்ட பயிர்ச் செய்கைக்காக விதைவகைகள் கையளிக்கப்பட்டு வருகிறது.

வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை மூலம் விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் முகமாகவே இவ்விதை இனங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நடவடிக்கை யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ப.மோகனதாஸ் தலைமையில் கீழ் நடைபெற்று வருகிறது. (எஸ்)

## சிகிச்சை பலனின்றி மாணவன் மரணம்


(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை -செட்டியார் மடம் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளாகி படுகாயமடைந்த மாணவன் ஒருவன் 24 நாட்களின் பின்னர் நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

அதேஇடத்தைச் சேர்ந்த அராலி வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி மாணவனான சுரேஸ்குமார் டிலைக்சன்(வயது - 16) என்ற மாணவனே சிகிச்சை பலனின்றி மரணமானார்.

குறித்த மாணவன் கடந்த 24 நாட்களுக்கு முன்னர் செட்டியார்மடம் வீதியில் ரி.வி.எஸ் ரக. மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற வேளை வீதியில் சறுக்கி வீழ்ந்து படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## நாடும் வரமளிப்பாள் நாகபூசணி



அன்னையென்று ஓடிவந்து சரண்புகுந்தோம்
அதிக வரம் எமக்களித்து காத்திடம்மா
முன்னை வினை தீர்த்தருள வேண்டுமம்மா
முப்பத்திரெண்டு அறம்வளர்த்த நாயகியே
உன்னைப் பணிந்தவர்க்கு உற்றதுணை நீயல்லவா
உலகாளும் நயினை நாயகியே சரணமம்மா
நின்னைச் சரணம்புகுந்தோம் நாகபூசணியே
நிரந்தர தீர்வருளிக் காத்திடம்மா

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

(நயினை நாகபூசணி மஹோற்சவ கால பாமாலை)

## நாடிவந்து அருள் நயந்திட வேண்டுமையா!



ஓங்கார வேல்தாங்கும் உமையீன்றமைந்தனே
உலகத்தொருவனாய் நின்றமூர்த்தி
ஆங்காரவுருவமாய் கையின் மைந்தனுய்யா வினுமளிவிலா
அண்ட மயிரத்தெட் அதிபதுமனாய்
நீங்காதுமெய்யடியாய் நெஞ்சினில் நிறைந்தருள்முருகனே
நித்தியான நந்தபொருளே
நிலையான பக்குவப்பேரின்பப் பேறுதரும் கந்தனே
நிலையின்றியோர் தெய்வமுளதோ
பாங்கான பொலிகண்டிகந்தவனப் பதிமேவு சிவசுப்ரமண்யப்
பன்னிருவிழிக் கருணையே
பாவைகுறவள்ளிகுஞ்சரியுடனே மயிலேறிப்பகதர்கள்புடைசூழ
பவனிவரு பரிபூரண கந்தபரனே
ஒருகால் மடித்தொருகாலூன்றிநின் மயிலேறிவரும்
ஓர் சரவணபவ குமரனே.

இசைமணி ஆ.மு.சுப்பிரமணியம்.

(பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி மஹோற்சவம்: இன்று 09ஆம் திருவிழா)

# பிரிவுபசாரவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கரவெட்டி விக்னேஸ்வராக கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் ஓய்வு பெற்றுச் செல்வதை அடுத்து, இவருக்கான பிரிவுபசார விழா எதிர் வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் கே.செல்வரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தகுமார், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கவுள்ளனர். (109)

# சுகாதாரபணிமனைக்கு காணிகள் அன்பளிப்பு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளையைச் சேர்ந்த சமூக சேவையாளரான எஸ். செல்வநாயகம் என்பவர் 4 பரப்புடைய தனது சொந்தக் காணியை தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் அடுத்த எல்லையாக அமைந்துள்ள இக்காணி தொடர்பான ஆவணங்களை மேற்படி சமூக சேவையாளர் அண்மையில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் கையளித்தார்.

நீண்டகாலமாக இப்பணிமனை நிரந்தர கட்டடம் இன்றி இயங்கி வந்த நிலையில் தற்போது காணி வழங்கப்பட்டுள்ளதால் இதில் புதிய கட்டடமொன்று அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் பணிமனையின் செயற்பாடுகள் புதிய கட்டடத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பொதுமக்கள் சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. - லெனின்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## முத்தான கருத்துக்கள் மூன்று!

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள், கட்சிக்கு ஆளெடுப்பதில் பெரும் போட்டி நடத்திக் கொண்டிருக்கின்றன. கூட்டமைப்புக்கு அல்ல; தங்கள் தங்கள் கட்சிகளுக்கு! தமிழரசுக் கட்சியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதத்தைப் பாவிப்பதையும் ஏறக்குறைய நிறுத்திவிட்டார்கள்.

மேலும் முரண்நகை என்னவென்றால், கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் ஆள் சேர்ப்பு நடவடிக்கைகள் கூட்டமைப்புக்கு எதிரான பிரச்சாரத்தின் மூலமே நடைபெற்று வருவதுதான்! கூட்டமைப்பு என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு நீ தனியாக என் கட்சிக்கு வந்துவிடு என்றே எல்லோரும் வந்து நெருக்குவதாகச் சொன்னார் உதிரிக் கட்சியொன்றைச் சேர்ந்த ஒரு நண்பர்.

ஒரு தமிழ்க் கட்சி தனது உறுப்பினர்களிடையே நடத்திய ஒரு நிகழ்வின் போது, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பெருந்தலைவர் ஒருவர் அழைப்பின்றியே போய்க் கலந்து கொண்டிருக்கிறார். "என்னமோ தம்பி, உடனே பார்க்க வேணும்போல இருந்தது, அதுதான் வந்தனான்" என்றும் அன்பில் நெகிழ்ந்திருக்கிறார்.

கூட்டமைப்பிலுள்ள மற்றொரு கட்சியினரோ தங்களது கட்சிக் கூட்டத்துக்கு, கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள கட்சியினரையும் அழைத்து தமிழரசுக் கட்சிக்குப் போட்டியாக விருந்து கொண்டாடி உபசரித்திருக்கிறார்கள்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் இந்தப் போட்டியால் திடீர் முக்கியத்துவம் பெற்றுவிட்டதை வியப்போடு நோக்கும் உதிரிக் கட்சிகளின் உறுப்பினர்கள், விருந்தையும் அன்பையும் விடுவானேன் என்று அவர்களது அழைப்புக்கெல்லாம் போய்வருகிறார்கள்.

சரி, கட்சிக்கு ஆள் சேர்க்கும் போது, அந்தக் கட்சியின் கொள்கை என்னவென்பதைச் சொல்லி இருப்பார்களல்லவா? அவர்களுக்கிடையேயான கொள்கை வேறுபாடு எதுவென்பதைத் தெரிந்து கொண்டீர்களா என்று, இரண்டு தூண்டில்களிலும் சிக்கி இரையைச் சாப்பிட்டுவிட்டு நழுவியிருப்பவர்களில் ஒருவரான அந்த நண்பரைக் கேட்டோம்.

இரண்டு பேருமே ஒன்றையேதான் சொல்கிறார்கள் என்றார் அவர். இலங்கையில் வரும் எந்த அரசாங்கமும் தீர்வைத் தரப் போவதில்லை. இந்தியா, அமெரிக்காவும் நமக்கு எதையும் செய்யப் போவதில்லை. எங்களாலும் இந்தப் பிரச்சினைக்கு ஒன்றும் செய்துவிட முடியாது. இந்த முத்தான கருத்துக்கள் மூன்றையும் கூட்டமைப்பிலுள்ள இருதரப்புமே உறுதியாகச் சொல்கிறார்கள் என்றார்.

அட, மக்களின் பிரச்சினைக்கு எதையும் செய்ய முடியாதென்றால் எதற்குக் கட்சி? பிறகு அந்தக் கட்சிகள் சேர்ந்தொரு கூட்டு எல்லாம் எதற்கு? என்று நீங்கள் கேட்டிருக்க வேண்டுமல்லவா என்றோம். அவர்களது அடிமடியில் கைவைத்து, அவர்களிடமிருந்து ஒரேயடியாக விலக எனக்கு விருப்பமில்லை என்று சிரித்தார் நண்பர்.

கூட்டமைப்பினர் தோண்டி எடுக்கும் உணர்ச்சிகரக் கோசங்களிலும், வீரச் சவால்களை விட்டுக் கொண்டிருப்பதிலும், காலத்துக்குக் காலம் ஏதோ ஒரு வெளிநாட்டுத் தேர்தல் முடிவையும், சர்வதேசக் கூட்டங்கள் தொடங்கி நிறைவெய்துவதையும் நமது மக்களின் பிரச்சினைத் தீர்வுக்குரிய இணைநிகழ்வுகளாகக் கதையளந்து கொண்டிருப்பதையும் பார்த்து வருபவர்களுக்கு இவர்களது கட்சிக் கொள்கைத் திட்டமெல்லாம் ஒரு பெரிய சூனிய வட்டம்தான் என்பது தெரியாமல் இருந்திருக்காது.

ஆனால், கட்சி கூட்டு என்பதெல்லாம் தேர்தலில் வாக்கு வாங்குவதற்கு மட்டுமே, மற்றும்படி நம்மால் இந்தப் பிரச்சினையில் எதுவும் செய்ய முடியாதென்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்பவர்களை, நமது மக்களும் புத்திஜீவிகளும் இன்னும் நம்பி வாக்குப் போடக் காத்திருப்பதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை!

- ஆசிரியர் -

## இஸட் புள்ளி தடை எதிரொலி
# கல்வி அமைச்சரை பதவி விலகுமாறு ஆசிரிய தொழிற் சங்கங்கள் வலியுறுத்து

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சையின் இஸட் புள்ளிகளை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டதனை அடுத்து கல்வி அமைச்சர் தனது பதவியிலிருந்து விலக வேண்டுமென ஆசிரிய தொழிற் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மாணவர்களின் கல்வியைச் சீர்குலைத்த அமைச்சர் தொடர்ந்தும் பதவி வகிக்க அனுமதிக்கக் கூடாது என இலங்கை ஆசிரியர் ஒன்றியத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தப்பரீட்சைப் பெறுபேறுகள் பிழையானவை என பெற்றோர், மாணவர்கள் மற்றும் ஏனைய அனைவரும் குற்றம்சுமத்திய போதிலும், கல்வி அமைச்சர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று இலட்சம் மாணவர்களின் வாழ்க்கையுடன கல்வி அமைச்சு விளையாடியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாணவர்களின் உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், மாணவர்களின் உரிமையை மீறிச் செயற்பட்ட அமைச்சர் தொடர்ந்தும் பதவி வகிப்பது நியாயமாகுமா என ஜோசப் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

294,000 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் இதில் 140000 மாணவர்கள் விடைத்தாள் மீள் மதிப்பீட்டிற்காக 750ரூபா செலுத்தி விண்ணப்பம் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பாரியளவில் அழுத்தங்களைப் பிரயோகித்த அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளார்.

## எரிபொருளின் விலைகளை குறைக்க தயாரில்லாத அரசு

(கொழும்பு)

எரிபொருளுக்கான விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சர்வதேசச் சந்தையில் எரிபொருளுக்கான விலை வீழ்ச்சியடைந்து செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், சர்வதேச சந்தையில் எரிபொருள் வீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ள நன்மைகளை மக்களுக்கு வழங்க அரசாங்கம் தொடர்ச்சியாக தயக்கம் காட்டிவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தென் ஆசியாவில் எரிபொருளுக்கான மிகவும் விலை உயர்வான நாடாக இலங்கை திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பேஸ்புக் குற்றங்கள் அதிகரிப்பதாக முறையீடு

முகப்புத்தகம் எனப்படும் பேஸ்புக் இணையம் குறித்து இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 360 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதென இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. முறைப்பாடுகளில் அதிகமானவை போலி பேஸ்புக் கணக்குகள் தொடர்பானவை என அப்பிரிவின் தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் றொசான் சந்திர குப்த குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக பேஸ்புக் கணக்கில் பலாத்காரமாக உள்நுழைதல் குறித்தும் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால் பேஸ்புக் கணக்கு வைத்திருக்கும் பாவனையாளர்கள் தங்களுடைய கணக்குகளை பாதுகாப்பாக பேண வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அறுபதாயிரம் குவைத் 'தினாரை' திருடிய இலங்கையர் மாயம்

சுமார் 60,000 குவைத் தினார் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக குவைத்தில் சாரதியாகப் பணிபுரியும் இலங்கைப் பிரஜை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்து குவைத் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரு ஊழியர்கள் பணியாற்றிய 570,000 தினார் பணம் இருந்த கார் ஒன்று தொடர்பாடல் வர்த்தக நிலையங்களில் பணம் வசூலித்துவிட்டு குவைத் விமான நிலையத் தொடர்பாடல் வர்த்தக நிலையத்தில் பணம் வசூலிக்கச் சென்றுள்ளது.

காரில் இருவர் பணியாற்றியுள்ளனர். ஒருவர் சாரதி (இலங்கையர்) மற்றையவர் பண வசூலிப்பாளர்.

விமான நிலையத்திற்கு முன்புறம் காரை நிறுத்திவிட்டு சாரதியை பாதுகாப்புக்காக அமர்த்திவிட்டு பணியாளர் பணம் வசூலிக்கச் சென்றுள்ளார். காரில் 570,000 தினார் பணம் இருந்துள்ளது.

பணம் வசூலித்து திரும்பிய ஊழியர் அதிர்ச்சியடைந்தார். அதற்குக் காரணம் காரும் சாரதியும் திடீரென காணாமல் போனமையாகும்.

பின்னர் தனது நிறுவன அதிகாரிகளுக்கு தகவல் வழங்கி அதன் மூலம் குவைத் விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

காரையும் சாரதியையும் கண்டுபிடிக்க முடியவில்லை. செய்மதி ஊடாகக் கண்டுபிடிக்க முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

அதன் பின்னர் கார் ஒரு மறைவான இடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது காரில் இருந்த பணத்தில 60,000 குவைத் தினார் காணாமல் போயுள்ளமை தெரியவந்தது.

இலங்கைச் சாரதியான அப்துல் அமீர் பணத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் நிலையில், குவைத் பொலிஸார் அவரைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அப்துல் அமீர் ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த குவைத் முகவரியை கண்டுபிடித்துள்ள பொலிஸார், அவர் தற்போதும் அங்கு தங்கியிருக்கிறாரா அல்லது போலி விசாவில் இலங்கைக்குத் திரும்பிச் சென்றுவிட்டாரா என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## சன் சீ கப்பலில் ஆட்கடத்தல்; மேலும் ஒருவர் கைதாகினார்

இலங்கையைச் சேர்ந்த 192 அகதிகளை எம்வீ சன் சீ கப்பல் மூலம் கனடாவுக்குக் கடத்திய மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ரோயல் கனேடியன் மவுண்டன்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நடராஜா மகேந்திரன் என்பவரே பெயர்ஷன் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சந்தேகத் தின் பேரில் கைது செய்யப் பட்டவராவார்.

இந்த ஆட்கடத்தல் விவகாரம் குறித்த விசாரணைக்கு தாய்லாந்து, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளின் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐவர் முன்னர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரின் தாக்குதலால் மாணவன் காயம்

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுவனின் கை, எதிரே வந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது தவறுதலாக பட்டதன் காரணமாக கோபமடைந்த பொலிஸார், ஒன்பது வயதான அந்த சிறுவனைக் கன்னத்தில் பளார் என அறைந்து காதைப் பிடித்து இழுத்துச் சென்று தாக்கியதில் அந்தச் சிறுவன் காயமடைந்து அம்பாறை வடினாகல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த சிறுவன் பயணித்த தனியார் பஸ் சாரதி செய்த போக்குவரத்து விதி மீறலுக்கு தண்டத்தாள் வழங்க குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பஸ்ஸில் ஏறியபோது அருகில் வந்த சிறுவனின் கை அவர் மீது பட்டுள்ளது. சம்பவம் குறித்து சிறுவனின தந்தை வடினாகல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு: தவறுகளும் குழப்பங்களும்

- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

**கூட்டமைப்பின் பலம் என்பது இதுதான். அரசாங்கம் வழங்குகின்ற பலத்தில் உயிர்வாழ்வது. அதையே தன்னுடைய ஜீவபலமாக்கிக்கொள்வது. அதாவது அரசாங்கமே அதனுடைய பலத்தை எப்போதும் வழங்கிக் கொண்டிருக் கிறது. அரசாங்கமே அதைத் தக்கவைக்கிறது. இது அரசாங்கத்துக்கு அவசியமான ஒன்று. தீர்வைக் கொடுக்காமல், தீர்வைப் பற்றிப் பேசிக் கொள்வதற்கு ஒரு அமைப்பை வைத்துக் கொள்வது. அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த முடியாத வகையில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு அமைப்பின் இருப்பையே அரசாங்கம் விரும்புகின்றது.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாதை எது? அதனுடைய பயணம் எந்த இலக்கை நோக்கியது? என்ற கேள்விகள் இன்று தீவிர நிலையில் அதனுடைய ஆதரவாளர்கள் மட்டத்திலேயே எழுந்துள்ளன.

இதனால், கூட்டமைப்பைக் குறித்து கடுமையான விமர்சனங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை கூட்டமைப்பை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று கடுமையாகப் பாடுபடும் போக்கும் தீவிரமாக உள்ளது.

ஆனால், முன்வைக்கப்பட்டு வருகின்ற எத்தகைய விமர்சனங்களையும் கூட்டமைப்புப் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை. அதைப்போல கூட்டமைப்புப் பின்பற்ற வேண்டிய முக்கியமான விசயங்களைக் குறித்த அறிவுரைகளைக் கூட அது ஏற்றுக்கொண்டதாக இல்லை. கூட்டமைப்பை எப்படி யாவது காப்பாற்றி விட வேணும் என மற்றவர்கள் கொண்டுள்ள அக்கறையின் அளவுக்கு அதனுடைய உறுப்பினர்களிடம் அது குறித்த பொறுப்புணர்வில்லை. குறைந்த பட்சமாக கூட்டமைப்பு இவற்றைப் பரிசீலிப்பதாகவும் இல்லை.

பதிலாக மேலும் மேலும் குறைபாடுகளையே அதிகமாகக் கொண்



டுள்ள ஒரு அமைப்பாக அதுதன்னை வைத்திருக்கிறது. முரண், சுயமுரண் என்ற நிலை கூட்டமைப்பினுள் அதிகமாக உருவாகியுள்ளது. எத்தகைய விமர்சனங்களையும் (அது சிநேக விமர்சனமாக இருந்தாலும் சரி, புறநிலை விமர்சனமாக இருந்தாலும் சரி) அது ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தோடும் இல்லை.

இதனால், அது தொடர்ச்சியாகக் கடுமையான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. தவறான அரசியல் தெரிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இலகுவில் எதிர்த்தரப்புகளால் தோற்கடிக்கக் கூடியதாக இருக்கிறது. இத்தகைய நிலை என்பது, அதனுள்ளேயே கொந்தளிப்பான நிலைமைகளை உருவாக்குகிறது, முரண்களை உண்டாக்குகிறது, அதனுடைய ஆதரவாளர்களைக்கூடச் சலிப்படையவும் சீற்றமடையவும் வைத்துள்ளது.

கூட்டமைப்பை ஆதரிக்கின்ற ஆய்வாளர்களும் பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் (கட்சிகளை ஆதரிப்போர் எப்படி ஊடகவியலாளர்களாக இருக்க முடியும்? என்று கேட்கப்படும் கேள்விகளும் உள்ளன) கூட இப்போது சோர்வடையும் நிலைக்கு வந்திருப்பதைக் காணலாம்.

எவர் எப்படித்தான் முயன்றாலும் கூட்டமைப்பானது வரவர மோசமான நிலையில் முரண்பாடுகளாலும் தடுமாற்றங்களாலும் சிதைந்து கொண்டேயிருக்கிறது.

புலிகளின் வீழ்ச்சிக்கு முன்னரேயே. கூட்டமைப்பின் தடுமாற்றங்களைக் குறித்தும் உள் முரண்பாடுகளைக் குறித்தும் விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் மெல்லிய பகிரங்க நிலையில் பலரிடமும் இருந்தன.

"ஆளுமையற்ற தரப்பாக கூட்டமைப்பு செயற்படுகிறது, சுயாதீனமாக அதனால் செயற்பட முடியாது?" என்றனர்.

"புலிகள் வீழ்ச்சியடைந்த பின்னரும் அது அப்படித்தான் உள்ளது. பின்னர் அது இந்தியாவின் நிகழ்ச்சி நிரலைக் கடந்து சிந்திக்க முடியாதிருக்கிறது" என்றார்கள் பின்னர், சற்று ஏமாற்றத்தோடு.

"இப்போது கூட்டமைப்பினர் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்குத் தாளம் போடுகிறார்கள்" என்று குற்றம் சாட்டப்படுகிறது.

கூட்டமைப்பின் மீது தொடக்க காலத்தில் விமர்சனங்களை முன்வைத்தவர்கள் "இனப்பிரச்சினையில் மாறுபாடான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்", "அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குக் கட்டுப்பட்டவர்கள்" எனச் சந்தேகிக்கப்பட்டனர்.

ஆனால், இப்போது அதனுடைய கட்சியினர், ஆதரவாளர்கள் என்போரே அதனைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். அதனைக் குற்றம் சாட்டுகின்றனர் என்றால் இவர்கள் எல்லாம் எப்போது அரசின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டனர்? அல்லது இவர்களும் கூட்டமைப்பை எதிர்க்கும் நிலைக்குச்சென்று கொண்டிருக்கின்றனரா? உண்மையில் அவ்வாறெல்லாம் இல்லை.

இந்த நிலையில் மிகக் கடினமான எதிர்த்தரப்புடன் போராடி எவ்வாறு அது விடுதலையைப் பெற முடியும்? அல்லது தீர்வினைப் பெற இயலும்? ஒரு கொடி (தேசியக் கொடி) விவகாரத்தையே சரியாகக் கையாள முடியாத நிலையில் அது தடுமாறியது அண்மைய உதாரணம்.

எனவே, இன்று எழுகின்ற கேள்விகளுக்கு அதனுடைய பதில் என்ன? அதனை ஆதரிப்போரின் பதில்கள் என்ன?

எழுந்து நிற்கவே முடியாத ஒரு எருதை வைத்துக்கொண்டு பயணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஆத்தாக் கொடுமைக்காக - பேருக்காக ஒன்று முன்னே நிறகட்டுமேஎன்று சொல்வார்களே! அது மாதிரி ஒரு அமைப்பு இருப்பது, பெரும் நெருக்கடிகளின் மத்தியில் இருக்கின்ற சமூகத்துக்கு சரியாகுமா?

ஆனால், இலங்கை அரசுக்கு மட்டுமல்ல சிங்களப் பெருந்தேசியவாதிகளுக்கும் கூட்டமைப்பே தேவையாக இருக்கிறது. இந்த அமைப்பையும் விட ஒரு பலமான அமைப்பு, செயலாற்றல் மிக்க, சிந்தனைத்திறன் மிக்கஅமைப்பு ஒன்று வருமிடத்து அதனைஎதிர்நோக்குவதில் அரசுக்கும் சிங்கள மேலாதிக்கத்தினருக்கும் சிரமங்கள் ஏற்படும்.

அதையும் விட இதைப் பராமரிப்பது அவர்களுக்கு அதிக நன்மையை அளிக்கக் கூடியது. பலவானைக் கையாள்வது கடினம். பலவீனமானவனைக் கையாள்வது மிகச் சுலபம் என்பது அனைவரும் அறிந்த எளிய உண்மை.

அதற்கு நெருக்கடியைக் கொடுக்கும் தரப்புகளாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் ரிசாத் பதியுதீனும் உள்ளனர்.

இந்த தரப்புகள் வெளிப்படையாக அரசாங்கத்துடன் இணைந்து நிற்கின்றன. அப்படி இணைந்து நின்று கொண்டே அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து சில காரியங்களைச் செய்விக்கின்றன. (சம்பந்தன் பிடிப்பதும் சிங்கக்கொடி. டக்ளஸ் தேவானந்தா பிடிப்பதும் சிங்கக் கொடி. ஆனால், ஒருவர் அரசாங்கத்துக்கு வெளியே நின்று பிடிக்கிறார். மற்றவர் அரசாங்கத்துடன் நின்று பிடிக்கிறார் என்று ஒரு ஆய்வாளர் எழுதியிருந்தமை கவனத்திற்குரிய ஒன்று). இந்தத் தரப்புகள் நெருக்கமாக இருப்பதன் காரணத்தினால் இவை முன்வைக்கும் கோரிக்கைகளைப் புறந்தள்ள முடியாத நிலை, அரசாங்கத்துக்கு ஒரு தவிர்க்க முடியாத நெருக்கடியாகும். இந்தத்தரப்புகளின் கோரிக்கைகளை முழுமையாகச் செய்யாது விட்டாலும் குறிப்பிடத்தக்க அளவில் அது செய்தே ஆக வேண்டும் என்பது நிர்ப்பந்தம்.

இல்லையெனில் அதுவே அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை உருவாக்கும். - "உன்னுடன் நிற்கும் தரப்பினரின் சிறிய கோரிக்கையைக் கூட நீ நிறைவேற்றவில்லையே" என்று வெளியுலகத்தின் கேள்விகள் இந்தச் சந்தர்ப்பத்தில் எழும். எனவே அந்த நெருக்கடியைத் தணித்துக் கொள்வதற்காக அது விருப்பமில்லாது விட்டாலும்

அப்படியிருந்தாலும் அவர்கள் யாரும் தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்கான தேவையைக் குறித்துச் சிந்திக்காதவர்களும் அல்ல.எதிர்நிலையாளர்களும் இல்லை.

இங்கே பிரச்சினை கூட்டமைப்பிலேயே - அதனுள்ளேயே உள்ளது.

ஒரு அரசியல் அமைப்பானது ஒரு கொள்கையின் அடிப்படையில், கோட்பாட்டின் அடிப்படையில், அந்தக் கொள்கையையும் கோட்பாட்டையும் அடைவதற்கான வழிமுறைகளைக் கொண்டிருக்கும் வகையில், அதற்கான செயற்திட்டங்களின் அடிப்படையில், அதற்கானசெயலாற்றலின் அடிப்படையில் இருக்க வேண்டும். அரசியல் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

இத்தகைய கொள்கை, கோட்பாடு, செயற்திட்டம், செயலாற்றல் போன்றன கூட்டமைப்பிடம் உள்ளனவா? என்பதே இங்கே முன்னிறுத்தப்படும் கேள்வியாகும். அவை இருந்திருந்தால் அது பலருடைய விமர்சனங்களுக்கும் உள்ளக முரண்களுக்கும் உட்பட வேண்டியிருக்காது.

கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வதில் தொடங்கி, மக்களுக்கான பணிகள் மற்றும் அரசியற் பேச்சுகளில் முன்வைப்பதற்கான தீர்வுத்திட்டத்தைத் தயாரிப்பது வரையில் உள்ள ஏகப்பட்ட விடயங்களில் எந்த ஒன்றுக்கும் அது இதுவரையில் எத்தகைய தீர்மானங்களையும் எடுத்ததில்லை.

கூட்டமைப்பின் பலவீனம் என்பது இன்று மிகப் பகிரங்கமானது. தன்னுடைய மக்களாலேயே பரிகசிக்கப்படும் ஒரு அமைப்பாக அது மாறியுள்ளது.

ஆகவே பலவீனமான நிலையில் இருக்கும் கூட்டமைப்புக்கு நீர் ஊற்றுவதிலேயே அரசாங்கம் கவனஞ் செலுத்துகிறது.தெற்கிலே பலவீனமான ஐ.தே.கவை (ரணில் தலைவராக இருக்கும் வரையில் அவரால் ஒரு கோல் போடவே முடியாது என ஐ.தே.க வினரே சொல்வதைப்போல) அரசாங்கம் பேணி வளர்ப்பதைப்போல வடக்கிலே கூட்டமைப்பை அதுபேணுகிறது.

கூட்டமைப்பின் பலம் என்பது இதுதான். அரசாங்கம் வழங்குகின்ற பலத்தில் உயிர்வாழ்வது. அதையே தன்னுடைய ஜீவபலமாக்கிக் கொள்வது. அதாவது அரசாங்கமே அதனுடைய பலத்தை எப்போதும் வழங்கிக் கொண்டிருக்கிறது. அரசாங்கமே - அதைத் தக்கவைக்கிறது.

இது அரசாங்கத்துக்கு அவசியமான ஒன்று. தீர்வைக் கொடுக்காமல், தீர்வைப் பற்றிப் பேசிக் கொள்வதற்கு ஒரு அமைப்பை வைத்துக் கொள்வது. அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த முடியாத வகையில் எதிர்ப்பை வெளிப்படுத்தும்ஒரு அமைப்பின்இருப்பையே அரசாங்கம் விரும்புகின்றது.

தனக்கு அதிக நெருக்கடிகளைத் தராத, ஒரு அமைப்பைப் பராமரிப்பது என்ற தந்திரோபாயத்தில் அரசாங்கம் செயற்படுகிறது.

இந்த இடத்தில்தான் நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு உண்மை உண்டு. உண்மையில் அரசாங்கத்துக்குப் பிடிக்காத - அவற்றைச் செய்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஆகவே, உண்மையில் அரசாங்கத்தின் போக்கின்படி இது அதற்கு தவிர்க்க முடியாத ஒரு நெருக்கடியே.

இந்த நெருக்கடிகளை எதிர்காலத்திற் தவிர்ப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது. எனவேதான் அது வடக்குக் கிழக்கில் தனியான ஏற்பாட்டை மேற்கொண்டு - சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தி வருகிறது.

இதன்மூலம் தான் மட்டும் தனியே பலமாவது, அல்லது பலவீனமான கூட்டமைப்புக்கு அடுத்தபடியாக சுதந்திரக் கட்சியே அடுத்த இடங்களைப் பெறுவது என்ற அணுகுமுறையைப் பலப்படுத்துவது. அரசுக்குச் சார்பான தரப்புகளின் தேவையைத் தவிர்த்து விட முயற்சிப்பது இந்த அடிப்படையிற்தான். ஆகவே, இதிலும் தமிழ் பேசும் மக்கள் மேலும் தோற்கடிக்கப் படும் பொறிகளே அதிகம் தென்படுகின்றன.

எனவே நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதை மிக எளிதாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

இதை விளங்கிக் கொண்டால் அதிக குழப்பங்கள் பலருக்கும் ஏற்படாது, அதற்குப் பிறகு பதற்றங்கள் ஏற்படவும் அதற்காக மருத்துவமனைகளை (அரசியல் மருத்துவ மனைகளை) நாடவும் வேண்டியிராது.

# தமிழீழத்திற்கு ஆதரவளித்தால் பேரழிவு ஏற்படுவது நிச்சயம்

## இந்தியாவை எச்சரிக்கிறார் சம்பிக்க



(கொழும்பு)

பிரிவினைவாத சதிகாரர்களின் பேச்சுக்களைக் கேட்டு மீண்டும் தமிழ் மக்கள் அழிவுகளைத்தேடிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் உள்நாட்டில் தனி நாட்டுக் கொள்கைகளுக்கோ தீர்வுகளுக்கோ இனி ஒரு போதும் இடமில்லையென அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

தமிழீழத்திற்காக இந்தியா குரல் கொடுத்தால் இலங்கையில் பேரழிவுகளே ஏற்படும். இதற்கு உள்நாட்டில் வாழும் தமிழ் மக்களும் ஏமாறக் கூடாது ஈழத்துக்கு தமிழகமும் முயற்சிக்க கூடாது.

இதனை அனைத்து தரப்புக்களுக்கும் தெளிவுபடுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று இந்தியா உட்பட ஏனைய சர்வதேச நாடுகளுக்கு பல முறை கூறியும் கேட்டபாடில்லை.

எனவே இதற்கு எதிராகவும் நடவடிக்கைகள் முன்னெடுப்பது அவசியமாகும். எவ்வாறாயினும் கருணாநிதி, சீமான், வைகோ போன்றவர்களின் விருப்பங்கள் இலங்கையில் ஈடேறாது என்று அவர் குறிப்பிட்டார்.

எனக்கு எதிராக கடந்த வாரத்தில் தமிழகத்தில் பாரிய எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதனை வைகோ, சீமான் மற்றும் கருணாநிதி போன்றவர்கள் முன்னெடுத்தனர்.

இவர்கள் இலங்கையின் சுயாதீன தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலேயே செயற்படுகின்றனர்.

இலங்கை பிரச்சினை எனக் கூறி சர்வதேச புலிகளிடமிருந்து நிதிகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் உள்நாட்டு அரசியலில் இருப்பைத் தேடிக் கொள்கின்றனர்.

இந்தியாவில் முன்னெடுக்கப்படுகின்ற எவ்வகையான போராட்டத்திற்கும் அஞ்சப் போவதில்லை. அதேபோன்று உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதையும் அனுமதிக்கப் போவதில்லை.

புலிப்பயங்கரவாதிகளின் தமிழீழக் கனவை நனவாக்கிக் கொள்ளவே தமிழ் நாட்டின் ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சிக்கின்றனர். இதற்கு ஒரு போதும் ஜாதிக ஹெல உறுமய இடமளிக்காது.

பிரிவினைவாத சதிகாரர்களின் பேச்சுக்களைக் கேட்டு மீண்டும் தமிழ் மக்கள் அழிவுகளை தேடிக் கொள்ளக் கூடாது.

ஏனெனில் உள்நாட்டில் தனி நாட்டுக் கொள்கைகளுக்கோ தீர்வுகளுக்கோ இனி ஒருபோதும் இடமில்லை எனத் தெரிவித்தார்.

# 90 வீதமான சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

அண்மையில் வெளியிடப்பட்ட புதிய கணிப்பின்படி 90 சதவீதமான சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கு நன்கு அறிந்த நம்பிக்கைக்குரிய நபர்களினாலேயே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.குடும்பத்தில் நன்கு அறியப்பட்டவர்கள், அயலவர்கள், உறவினர்கள் மற்றும் ஆசிரியர்களால் சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்கள பிரதி சொலிஸ்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

விசேடமாக கிராமப் பகுதிகளில் சிறுவர்கள் மீதான வல்லுறவுகள் அதிகரித்துள்ளன. 90 சதவீதமான சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் வேண்டப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக பிரதி சொலிஸ்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார். 2010 ஆம் ஆண்டில் 3421 சிறுவர் துஷ்பிரயோகங்களும் 2011ஆம் ஆண்டில் 2490, 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 744 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

துஷ்பிரயோகச் சம்பவங்கள் குறித்து நீதிமன்ற விசாரணைகள் தொடர்கின்ற போதும் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் வழக்கொன்றை விசாரித்து தீர்ப்பு வழங்க 10 வருடங்கள் வரை செல்லக் கூடும் என பிரதி சொலிஸ்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

# பொய் கூறும் அரசியல்வாதிகளால் ஏமாற்றமடைகின்றனர் மக்கள்



அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சில அரசியல்வாதிகள் பொய் சொல்வதாகவும் மக்கள் இந்தப் பொய்களைக் கேட்டு ஏமாற்றமடைவதாகவும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எட்டியாந்தோட்டை பகுதியில் சிரேஷ்ட அரசியல் தலைவர் என்.எம். பெரேராவின் உருவச் சிலையை அங்குரார்ப்பணம் செய்து உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

என். எம். பெரேரா நாட்டின் மிக முக்கியமான ஓர் அரசியல் தலைவர். தற்போதைய அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றார்.

தமிழ், சிங்கள மொழிகளின் மூலம் கருமமாற்றக் கூடிய வகையில் பொதுவான மொழிக் கொள்கை உருவாக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்தியிருந்தால் 30 ஆண்டுகால போர் ஏற்பட்டிருக்காது. பாடசாலை சிறுவர்களுக்கு பகல உணவு வழங்கப்படவேண்டுமெனவும் அவர் கோரியிருந்தார் என சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# சிவில் பாதுகாப்பு படையில் முன்னாள் புலி உறுப்பினர்கள்

(கொழும்பு)

சிவில் பாதுகாப்பு படையணியில் புனர்வாழ்வுப் பெற்ற முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.


இதற்கான விண்ணப்ப படிவங்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் அவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 2 ஆயிரம் விண்ணப்பதாரிகளில் இருந்து ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஜூலை மாதம் நடுப்பகுதியளவில் சிவில் பாதுகாப்பு படையணிக்கானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், முதலில் சிங்களவர் பெரும்பாலாக உள்ள எல்லைக் கிராமங்களில் பணிக்கமர்த்தப்படுவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர் மீது தாக்குதலா? மறுக்கிறார் கடற்படைப் பேச்சாளர்



(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறும் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற் படையினர் தாக்குதல் நடத்துவதில்லை என கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் பிரசன்ன கோசல வர்ண குல சூரிய் தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு உரிய முறையில் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுவர் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறுவதை தடுக்கும் பொறுப்பு இலங்கை கடற்படையினருக்கு உண்டு. அதற்காக இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தவோ துன்புறுத்தவோ எந்த வித தேவைகளும் இல்லை

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்த இந்திய மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு உரிய முறையில் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டனர். இவ்வாறான முறையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

# வரட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக செய்கைகள் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கென குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

திறைசேரி, நீர்ப்பாசனத் திணைகளம், கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் இந்தக் குழு அமைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வட மத்திய மாகாண விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.


செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகளை நேற்று முதல் செயற்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டினை வளப்படுத்தும் விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு தாம் உள்ளிட்ட அரசாங்கம் அர்பபணிப்புடன் செயற்படுமென ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

பயிர்ச்செய்கை கடன் தொர்டர்பான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், விவசாயிகளின் பயிர்ச்செய்கைக் கிணறுகளை இயந்திரங்களைப் பயன்படுத்தி தூய்மையாக்க நீர்ப்பம்பிகளை வழங்கல், அடுத்த போகத்திற்கு தேவையான விதைகளுக்கு பாதுகாப்பு வழங்குதல், கலாவாவி உள்ளிட்ட ஏனைய வாவிகளின் சேறுகளை அகற்றுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமது பிரதேசத்தின் பல வாவிகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது உள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட வட மத்திய மாகாண விவசாய பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

# வழக்கு விசாரணையை துரிதப்படுத்த 75 நீதவான்கள் நியமனம்



நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரணை செய்யும் நோக்கில் புதிதாக 75 நீதவான்கள் நியமிப்பது தொடர்பான யோசனைத் திட்டத்தை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்வைத்துள்ளார்.

இந்நிலையில், மேல் நீதிமன்ற நீதவான்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட உள்ளது. நீதவான்களின் பற்றாக்குறை காரணமாக வழக்கு விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் நீதவான்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நீதிமன்ற சட்டத்திலும் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது என ஹக்கீம் தெரிவித்துள்ளார்

# வைத்தியசாலைகளின் பணிகள் விசேட திட்டத்தில் இணைப்பு

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சுகாதார வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குதல், வைத்தியசாலை விடுதிகள் மற்றும் வளாக பராமரிப்பு உட்பட 5 வேலைகளை முன்னெடுக்கும் வகையில் இந்த வேலைகள் 5எஸ் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வைத்தியசாலைகளில் குறித்த வேலைகள் வைத்தியசாலை ஊழியர்களாலும் உரியவர்களாலும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படாது நோயாளர்கள் கஷ்டங்களை அனுபவிப்பதைக் கருத்தில் கொண்டே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மேற்படி வேலைகள் 5எஸ் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையை அடுத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமை புரியும் அனைத்துப் பணியாளர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வைத்தியசாலை பணியாளர்கள் 5 குழுக்களாகப் பிரிந்து மேற்படி செயற்திட்டங்களை செயற்படுத்தி வருவதுடன், வைத்தியசாலையின் அனைத்து பிரிவுகளும் புதுப்பொலிவுடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பணியாளர்கள் நோயாளர்களுக்கான சேவையை வழங்குவதில் மும்முரமாக ஈடுபடுவதாகவும் இதனால் நோயாளர்கள் முன்னை விட சிறப்பான சேவையைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (11)



மல்லாகம் புனித சதாசகாயமாதா ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை இடம் பெற்ற போது புனித சதாசகாய மாதா வெளிவீதியுலா வருவதைக் காணலாம்.

# சேவைநலன் பாராட்டு

(பருத்தித்துறை)

புலோலி தெற்கு கிராம அலுவலர் நா.குமரகுருபரனுக்கான சேவைநலன் பாராட்டு விழாவும் பிரிவுபசார விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 8 மணியளவில் புலோலி தெற்கு வீரபத்திரர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

புற்றளை மகா வித்தியாலய ஆசிரியர் ந.சிவலிங்கம் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் க.க.லோகநாதன் வரவேற்புரையை நிகழ்த்துவார்.

தொடர்ந்து வடமாகாண ஓய்வு நிலை பிரதம செயலாளர் அ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், பருத்தித்துறை ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.ரகுநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர். (109)

# சமய சமூக நல விழா

(சாவகச்சேரி)


தென்மராட்சி பிரதேச சமய சமூக நலவிழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நடைபெறும் சமய விழா தென்மராட்சி திவ்ஜீவன சங்கத்தலைவர் க.செ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் டாக்டர் எஸ். அம்பிகைபாலன், ம.கந்தையா, ரி.இராமலிங்கம், சுப்பிரமணிய சுவாமிகள், திருமதி க.திலகவதி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஆசியுரையை நல்லை ஆதீனம் குருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவப்பிரம்மஸ்ரீ அ.பரராஜசேகரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். பாராட்டுரையை இளைப்பாறிய நீதிபதி கு.திருநாவுக்கரசு, சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி ஆகியோர் நிகழ்த்துவர். தொடர்ந்து நடைபெறும் சமூக நிகழ்வுகள் சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து சிறப்பிப்பதுடன் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள 21 பாடசாலை மாணவர்களுக்கு வங்கி சேமிப்பு புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (11)

# பரமர் சங்கமம்



"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" திருவள்ளுவர் குறள் மொழி இது. இண்டைக்குப் பரமர் பேசுகின்றதைப் பார்த்து நீங்களெல்லாம் மூக்கில் விரல்தான் வைக்கப் போகிறீங்கள். அது எண்னெண்டால் சமீபத்தில் எங்கட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சொன்னவரெல்லே "தமிழருக்கு மட்டும் வடக்குச் சொந்தமல்ல" என்று.

அது தான் பிரச்சினை. உந்தச் சிங்கள அரசியல் வாதிகள் காலத்துக்குக் காலம் இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தம் தமிழர் வந்தேறு குடிகள் என்றே சொல்லப் பாக்கினம் முடியேல்ல.

சிங்கள மகாவம்சம், தீபவம்சம் போன்ற இலக்கிய நூல்களிலும் உண்மைக்குப் புறம்பான வரலாறுகளை எழுதி வைத்து தலைகீழாக நிண்டு மாஞ்சு பாக்கினம். சரித்திரம் என்ன தரித்திரமே தூங்கிவிட! கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன எண்ட நடுநிலை வாதி இப்படிக் கூறுகின்றார்.

"இலங்கைத் தீவு தமிழர் தேசம் என்பதை உரிய ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவேன். வரலாறு தெரிந்தால் முதுகெலும்பு இருந்தால் எல்லாவலை மேத்தானந்த தேரர் என்னுடன் பகிரங்கமான விவாதமொன்றுக்கு வரவேண்டும்" என்கின்றார்

இதுக்கிடேல்ல எங்களுக்கெல்லாம் தெரிஞ்ச விசயம் தானை சங்கிலியன், பண்டார வன்னியன் அதற்கு முன்பாக எல்லாளன் போன்ற சிற்றரசர்கள் ஆண்ட பிரதேசங்களை ஆங்கிலேயர் வந்து ஒரு குடையின் கீழ் வடக்குக் கிழக்கெண்ட தமிழர் பிரதேசங்களையும் இணைத்து முழு இலங்கையை ஆக்கினதும்.

இந்த வருடம் மார்ச் 31 ஆம் திகதி இலண்டன் பல்கலைக்கழகத்தில் நம்மவரான சிவ.தியாகராஜா என்பவர் எழுதி வெளியிட்டுள்ள "புராதன கால இலங்கையும், பூர்வீக மக்களின் பண்பாடும்" என்ற ஆங்கில நூலில்

"இலங்கை மண்ணில் வாழும் மக்களில் பெரும்பாலனோர் புராதன திராவிட சமூகங்களின் வம்சாவழியினரே என்பதை இலங்கையின் அதிகார பூர்வ மகாவம்சம், தீபவம்ச இலக்கிய வரலாறுகளை மரபணுவியல், தொல்லியல், மானிடவியல், மொழியியல், கல்வெட்டியல், நாணயவியல், சமூகவியல் ஆகிய விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் வரலாற்றுப் பொய்மைகளை கிழித்து - வெளிச்சமிட்டு - அறுதியிட்டு உறுதியிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, சம்பந்தன் ஐயா கோத்தாபயவுக்கு பதிலளிக்கையில் கூறியிருக்கிற கதை எப்படியிருக்கு பாத்தியளே!

"வடக்குத் தனியாக தமிழர்களுக்கு மட்டும் தான் சொந்தம் என்றோ அல்லது அது சிங்களவர்களுக்குச் சொந்தமில்லை என்றோ நாமெப்போது கூறியிருக்கின்றோம்? எண்டால் இவர் சொந்தமில்லை எண்டா ஒப்புக் கொள்கின்றார்? "தாய் எதுக்கோ மாரடிக்க குத்தியன் பாலுக்கு குத்தி முறிஞ்ச மாதிரி" யெல்லோ எங்கட தமிழ்த் தலைவர்கள் எண்டவையும். அவேன்ர அரசியல் வரலாற்றுப் பார்வைகளும் கிடக்கு?

பரமர் இண்டைக்கு வித்தியாசமாகத்தான் பாத்திட்டார் இல்லையே பின்னை.. சொல்லுங்க பாப்பம்...

# யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் முறைப்பாட்டுப் பெட்டி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பிரணநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் 23 வட்டாரங்களிலும் இந்த முறைப் பாட்டுப் பெட்டி வைக்கப்படவுள்ளது.

இதில் முறைப்பாடு செய்கின்றவர்களின் முறைப்பாடுகள் தொடர்பாக அவர்களுக்கு குறியீட்டு இலக்கம் வழங்கப்படுவதுடன், பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன் அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன் தொலைபேசி, மின்னஞ்சல் முறைப்பாடுகள் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது என்றார்.

அத்துடன் மாநகரசபையால் மக்கள் குறைகேள் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் நாளாந்தம் 50 இற்கு மேற்பட்ட மக்கள் தங்கள் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர். இந்த முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்வுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (02)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு மகா நாச்சிமார் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 09.05 மணி முதல் 10 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இவ்வாலயம் கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து கடந்த வருடம் விடுவிக்கப்பட்ட பின், புனரமைப்பு செய்ததை அடுத்து கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# முரசின் இன்றைய பலன்

(27.06.2012 – புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 13 ஆம் திகதி அட்டமி மாலை 5.01 வரை.
நட்சத்திரம் அத்தம். பின்னிரவு 2.06 வரை. சித்தயோகம். அட்டமி - நவமி.
இராகுகாலம் 11.55 - 1.25 வரை. சுபநேரம் 04.25 - 5.55 வரை.
எமகண்டம் 07.25 -8.55 வரை. குளிகைகாலம் 10.25- 11.55 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பணவரவு, உறவினரால் இலாபம், ஆரோக்கியத்தில் கவனம், பண நெருக்கடி குறையும். |
| ரிஷபம் | புத்திர சுகம், திடீர் பணவரவு, பெரியோர் நட்பு, தெய்வ தரிசன பயணம். |
| மிதுனம் | நன்மைகள், பொன்பொருள் சேரும், உறவினரால் பிரச்சினை, அனாவசிய நெருக்கடிகள். |
| கடகம் | மனச்சோர்வு, முயற்சிகளில் வெற்றி, குடும்பத்தில் ஒற்றுமை, போட்டிகள் குறையும். |
| சிம்மம் | வாகன இலாபம், பொருளாதார முன்னேற்றம், புத்திரரால் சஞ்சலம், பணியில் நிம்மதி நிலை. |
| கன்னி | மனநிம்மதி, முயற்சிகளில் தடை, மறைமுக எதிர்ப்புகள், தாராளமான பண வரவுகள். |
| துலாம் | பெருமை, குடும்ப அன்னியோன்யம், நண்பர்கள் உதவி, திறமைக்கேற்ற வேலைவாய்ப்பு. |
| விருச்சிகம் | உற்சாகம், கனவுத் தொல்லைகள், பண விடயத்தில் கவனம், நண்பர்களை அனுசரி. |
| தனுசு | அரச நன்மை, நினைத்தது நிறைவேறும், குடும்பத்தில் ஒற்றுமை, வியாபாரத்தில் இலாபம். |
| மகரம் | பெரியோர்கள் ஆசி, பணவரவில் நெருக்கடி, குடும்பத்தில் வாக்குவாதம், கல்வியில் மந்தம். |
| கும்பம் | முன்தினம் போல் பேச்சில் நிதானம் அவசியம், எதிர்பாராத அனுகூலம், வீண் விரயம். |
| மீனம் | நண்பர் உதவி, திருமணம் கைகூடும், கடன்கள நிவர்த்தியாகும், போட்டிகளை சமாளிப்பீர். |




அகில இலங்கை ரீதியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியினால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் பிளேக் கிண்ணத்தை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கைப்பற்றியது. அணிக்கு ஏழு பேர் கொண்ட இக்கால்பந்தாட்டத் தொடரில் மாத்தறை அணியை வீழ்த்தியே சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி பிளேக் கிண்ணத்தை வென்றது. கிண்ணம் வென்ற அணியினர் அதிபர், பயிற்றுநர் மற்றும் பொறுப்பாசிரியருடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி., 20)

# கிண்ணம் வென்றது உத்வேகம் அளிக்கிறது

(ஹராரே)

முத்தரப்புத் தொடரில் கிண்ணம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. விரைவில் இலங்கையில் நடைபெறவுள்ள ருவெண்ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு இந்த வெற்றி உத்வேகமானது என சிம்பாப்வே அணியின் கப்டன் பிரண்டன் ரெய்லர் தெரிவித்துள்ளார்.

ருவெண்ரி - 20 கிரிக்கெட் தொடர் என்பது அதிர்ஷ்டம் மிக்கதொன்று என்றாலும், எமது திறமைகளை சரிவர வெளிப்படுத்தும் வேளையிலேயே அந்த அதிர்ஷ்டம் எம்மை நாடி வரும் என்பதை முதலில் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். பங்களாதேஷ், தென்னாபிரிக்க அணிகளுடனான முத்தரப்பு ருவெண்ரி - 20 கிரிக்கெட் தொடர் ஒரு சவால் நிறைந்த தொடராக எமக்கு அமைந்த அதேவேளை, அதில் நாம் சாதித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த மகிழ்ச்சி அடுத்து நடைபெறவுள்ள உலக் கிண்ண ருவெண்ரி - 20 கிரிக்கெட் தொடரிலும் தொடர வேண்டும் என்பதே எமது இலக்காக உள்ளது. எமது அணியில் நல்ல சகலதுறை வீரர்கள் அதிகம் உள்ளனர். அனைவரும் வியக்கும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும். அதற்கான திறமையும், தகுதியும் எம்மிடம் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு மூன்றாமிடம்

(பீஜிங்)

மூன்றாவது கரையோர ஆசிய விளையாட்டு விழாவில், ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும், இலங்கை மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

சீனாவில் நடைபெற்ற மூன்றாவது கரையோர ஆசிய விளையாட்டு விழாவில் 9 நாடுகளின் கபடி அணிகள் கலந்து கொண்டன.முதலாவது இடத்தை ஈரானும், இரண்டாவது இடத்தை பாகிஸ்தானும், மூன்றாவது இடத்தை இலங்கை யும் பெற்றுக்கொண்டன.

மகளிர் பிரிவில் இந்தியா முதலாவது இடத்தையும், தாய்லாந்து இரண்டாவது இடத்தையும், இலங்கை மூன்றாவது இடத்தையும் பிடித்தன. இதில் 6 நாடுகள் பங்கேற்றன.

இலங்கை ஆண்கள் கபடி அணிக்கு இசுரு நுவன் கபில பண்டாரவும்,மகளிர் அணிக்கு திலினி தில்ஹாரவும்தலைமை தாங்கினர்.

நாங்கள் இறுதிவரை போராடினோம். எமது முயற்சிக்கு மூன்றாமிடம் பரிசாகக் கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி. அடுத்து நடைபெறும் போட்டியில் இதனைவிட முன்னேற்றங்கள் இருக்கும் என்று நம்புகின்றோம். அணி வீரர்கள் அனைவரும் புரிந்துணர்வுடன், ஒருங்கிணைந்து செயற்பட்டதே எமக்கும் மூன்றாமிடம் கிடைக்க முக்கிய காரணம். இது திருப்தி தருகின்றது என ஆண்கள் கபடி அணித் தலைவர் இசுரு நுவன் ஊடகங்களுக்குத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் வீனஸ் வில்லியம்ஸ் அவுட்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் ஆட்டத்துடனேயே அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார். அத்துடன் ஜோகோவிச், ரோஜர் பெடரர், மரியா ஷரபோவா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ஜுயன் கார்லோஸ் பெரிரோவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஜோகோவிச் 6-3, 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.



மற்றொரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் ஆல்பர்ட் ரமோசை சந்தித்தார். இதில் பெடரர் 6-1, 6-1, 6-1 என்ற நேர் செட் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் உலகின் முதல் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அவுஸ்ரேலியாவின் அனஸ்டாசியா ரோடியோனாவை சந்தித்தார்.இதில் அபாரமாக ஆடிய ஷரபோவா 6-2, 6-3 என்ற நேர் செட்டில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவை சந்தித்தார். இதில் வீனஸ் 1-6, 3-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

# விலக்கப்பட்ட வெலகெதர



இலங்கை அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் சானக வெலகெதர பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். அவரது தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் தொடர் முழுவதும் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கெதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டிக்கான அணி அறிவிக்கப்பட்ட போது அவ்வணியில் சேர்க்கப்பட்டிருந்த சானக வெலகெதர, முதலாவது போட்டியின் போது பங்குபற்றியிருக்கவில்லை. அவரது இடத்தை நுவான் குலசேகர பெற்றுக் கொண்டிருந்தார்.

வெலகெதரவிற்கு ஏற்பட்டுள்ள தோள்பட்டை தசைநார்க் கிழிவு குணமடைய காலம் எடுக்கும் என்பதால் அவர் இத்தொடரில் பங்குபற்ற வாய்ப்புக்கள் இல்லை என்பதனாலேயே வெலகெதர இத்தொடர் முழுவதிலும் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன,

சானக வெலகெதரவிற்கு தோள்பட்டையில் தசைநார்க் கிழிவு ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்குச் சத்திரசிகிச்சை தேவைப்படுகிறதா இல்லையா என்பது குறித்து வைத்தியர்களின் கருத்திற்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். இலங்கை அணிக்காகச் சிறப்பாகப் பந்துவீசி வந்த சானக வெலகெதர இத்தொடரில் பங்குபற்ற முடியாமற் போனமை துரதிர்ஷ்டவசமானது எனவும் தெரிவித்தார்.

31 வயதான இடதுகை வேகப்பந்து வீச்சாளரான சானக வெலகெதர இலங்கை அணிக்காக 18 டெஸ்ட் போட்டிகளில் இதுவரை பங்குபற்றி 48 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

International Cricket Council

# டி.ஆர்.எஸ். முறை அமுலாக்கம் கட்டாயம் என்கிறது ஐ. சி. சி.

(கோலாலம்பூர்)

கிரிக்கெட் போட்டியில் நடுவரின் முடிவை மறுபரிசீலனைக்கு உள்படுத்தும் (டி.ஆர்.எஸ்) முறையை கட்டாயமாக்க வேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பால் டிராக்கிங் சிஸ்டம், ஹொட்ஸ்பொட் கமரா ஆகிய தொழில்நுட்பங்களில் ஐ.சி.சி.யின் செயற்குழு முழுநம்பிக்கை கொண்டுள்ளது. இதன் துல்லியத்தன்மை வல்லுநர்களால் ஆராயப்பட்டு விட்டது. எனவே அனைத்து டெஸ்ட், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் டி.ஆர்.எஸ். முறையை அமுல்படுத்துவதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று ஐ.சி.சி. செயற்குழு பரிந்துரைத்துள்ளது.

இது தவிர டிஆர்எஸ் முறைப்படி, எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழப்பு ஆவதை முடிவு செய்வதில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்ஸில் இருமுறையும், ஒருநாள் போட்டியில் ஒரு முறையும் டி.ஆர்.எஸ். முறைப்படி நடுவரின் முடிவை பரிசீலிக்க வீரர்கள் கோரிக்கை விடுக்க முடியும். இது தவிர பவர் பிளே முறையிலும், 30 யார் வட்டத்துக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வீரர்களை நிறுத்தும் முறையிலும் மாற்றம் கொண்டுவரவும், டெஸ்ட் போட்டிகளை பகல் - இரவாக நடத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் டிஆர்எஸ் முறையை ஏற்க முடியாது என்ற தனது நிலைப்பாட்டில் இந்திய கிரிக்கெட் சபை உறுதியாக உள்ளது. இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளில் டிஆர்எஸ் முறை இருக்காது என்று அது வலியுறுத்திக் கூறியுள்ளது.

# ஐ.சி.சி. முடிவுக்கு ஹபீஸ் ஆதரவு

(காலி)

அனைத்து கிரிக்கெட் தொடர்களிலும் நடுவரின் தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென பாகிஸ்தான் அணி வீரர் மொஹமட் ஹபீஸ் கூறியுள்ளார்.

அனைத்து போட்டிகளிலும் இந்த முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபை சிபார்சு செய்துள்ளமைக்கும் அவர் ஆதரவு தெரிவித்துள்ளார். காலி சர்வதேச மைதானத்தில் இலங்கை அணிக்கெதிராக நிறைவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டியை அடுத்து அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார். மொஹமட் ஹபீஸ் தலைமை தாங்கிய பாகிஸ்தான் அணி இந்தப் போட்டியில் 209 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஹபீஸின் கருத்திற்கு, பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோரும் ஆதரவு தெரிவித்துள்ளார். செல வீனங்களை கருத்தில் கொண்டு கடந்த போட்டியில் நடுவரின் தீர்ப்பினை மீள் பரிசீலனை செய்யும் முறைமை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.





விளையாட்டுச் செய்திகள்

# தீவகத்திற்குட்பட்ட கால்பந்து; கிண்ணம் வென்றது ஐயனார்

(வேலணை)

வேலணை ஐயனார் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட தீவக அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் ஐயனார் 'ஏ' அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வேலணை ஐயனார் சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய இக்கால்பந்தாட்டத் தொடர் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. தீகவத்திற்குட்பட்ட 32 அணிகள் இப்போட்டித் தொடரில் பங்குகொண்டன.

தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஐயனார் 'ஏ' அணியும், புங்குடுதீவு நண்பர்கள் அணியும் மோதின. இதில் இரு அணிகளும் மிகப் பலமான முறையில் மோதிய போதும் ஐயனார் அணி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் சிறப்பானதொரு கோல் போடப்பட்டது. தொடர்ந்து நண்பர்கள் அணி பலமுறை கோல் போடும் முயற்சியை மேற்கொண்டபோதும் ஐயனார் பின்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தால் அந்த அனைத்து முயற்சிகளும்முறியடிக்கப்பட்டது. இறுதியில் ஐயனார் 'ஏ' அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஐயனார் 'பி' அணியும், புங்குடுதீவு மின்னல் அணியும் மோதின. இப்போட்டி கால்பந்தாட்ட இரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையும் வகையில் இடம்பெற்றது. இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடி தமது திறமைகளை வெளிப்படுத்திய அதேவேளை, இரசிகர்களையும் மகிழ்வித்தனர். முற்பாதி ஆட்டத்தில் ஐயனார் 'பி' அணியும், பிற்பாதி ஆட்டத்தில் மின்னல் அணியும் ஒவ்வொரு கோலைப் போட்டிருந்தனர். இரண்டாவது கோலைப் போட்டு வெற்றியை தம்வசப்படுத்த இரு அணிகளும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது தோல்வியிலேயே நிறைவடைந்ததுடன் போட்டி நேரமும் நிறைவடைந்தது. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 4-2 என்ற கோல் கணக்கில் ஐயனார் 'பி' அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஐயனார் 'ஏ' அணியும், ஐயனார் 'பி' அணியும் மோதின. இரு அணிகளும் ஒரு கொடியின் கீழ் பயிற்சிகளை மேற்கொண்ட அணி என்பதால் இரு அணி வீரர்களின் பலம், பலவீனம் என்பன இலகுவாக உணரப்பட்டிருக்கும், அதேவேளை, அதற்கேற்ற வகையில் கள வியூகங்களும் அமைக்கப்பட்டிருக்கும் என கால்பந்து இரசிகர்கள் எதிர்பார்த்தனர். அத்துடன் இப்போட்டி இறுதி வரை பரபரப்புக்குப் பஞ்சமில்லாத வகையில் அமையும் என்றே பெரும் எதிர்பார்க்கப்பட்டது. அதேபோல் முற்பாதி ஆட்டம் மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. இதில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டத்திலிருந்து ஆக்ரோஷம் கொண்டு வேகமான ஆட்டமுறையை தொடர்ந்த ஐயனார் 'ஏ' அணியினரை ஐயனார் 'பி' அணியால் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியில் பிற்பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களைப் ே பாட்டு ஐயனார் 'ஏ' அணி முன்னிலை வகித்தது. இறுதியில் போட்டி நிறைவுக்கு வந்த வேளை, 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை வசப்படுத்தியது. இப்போட்டியின் சிறந்த வீரராக அசோக்கும், சிறந்த கோல் காப்பாளராக தயாபரனும் தெரிவானார்கள்.

இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன்,ஈ.பி.டி.பி.யின்வேலணை அமைப்பாளரும், வேலணை பிரதேச தவிசாளருமான சிவராசா, வேலணை தெற்குப் பிரதேச செயலர் மஞ்சுளாதேவி உட்பட பொதுமக்கள், கால்பந்தாட்ட இசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பயனாளிகளுக்கான விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 25ஆவது வெள்ளி விழாவை முன்னிட்டு பயனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் 7ஆம் திகதி காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வீதியோட்ட நிகழ்வாக துவிச்சக்கர வண்டி ஓட்டம் காலை 8.05 மணிக்கும், முச்சக்கர வண்டி ஓட்டம் காலை 8.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

அதேவேளை, மைதான நிகழ்வுகளான 100 மீற்றர் ஓட்டம் காலை 9.30 மணிக்கும், தடை தாண்டல் 10.00 மணிக்கும், மெதுவான சைக்கிள் ஓட்டம் காலை 10.30 மணிக்கும், சங் கீதக் கதிரை 11.00 மணிக்கும், கயிறு இழுத்தல் போட்டி காலை 11.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

மாலை நிகழ்வாக பாடசாலை ரீதியாக இடம்பெற்றபேச்சு கவிதை வாசித்தல், வெள்ளிவிழா மலர் வெளியீடு உட்பட சிரேஷ்ட பயனாளிகளைக் கௌரவித்தல், பரிசில்கள் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக சுகாதார சேவைகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி ரதினி ஜீட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் காலை யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் இலட்சனைச் சிலை திரை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்)

# ஜே.பி.எஸ். ருவென்ரி-20 மகிழ்ச்சியளிக்கிறது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக நடத்தப்பட்ட ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சி. இப்போட்டிகளின் மூலம் யாழ்ப்பாண வீரர்களும் தேசிய அணியில் இடம்பிடித்துக் கொள்ளும் முனைப்புடன் செயற்படவேண்டும். திறமையும், தகுதியும் எங்களிடம் இருக்கும் பட்சத்தில் அந்த இலக்கை நோக்கி நீங்கள் செல்லத் தேவையில்லை. உங்களைத் தேடி வரும் என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுண ரணதுங்க தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முப்பது வருடகால அசாதாரண சூழ்நிலைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான விளையாட்டுக்கள் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயம். இன்று இலங்கை வரலாற்றில் முக்கியமான நாள். இலங்கையிலேயே முதல் தடவையாக பிறீமியர் லீக் ருவென்ரி - 20 போட்டி யாழ். மண்ணில் நடைபெற்றிருக்கின்றது. இவ்வாறான போட்டிகள் மூலம் எதிர்வரும் காலத்தில் யாழ்ப்பாண வீரர்கள் தேசிய அணியில் இடம்பிடிக்கவேண்டும். அத்துடன் இவ்வாறான போட்டிகள் நடைபெறும்போது என்னை அழைத்தால் நிச்சயம் வருவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்.பி.)

# வடமாகாண கரப்பந்தாட்டம் யாழ். மாவட்டம் சம்பியன்

(மானிப்பாய்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண கரப்பந்தாட்டத் தொடரின் இரு பிரிவுகளிலும் யாழ். மாவட்டம் சம்பியனாகியுள்ளது.

வடக்கு மாகாண மாவட்டங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டித்தொடர் கடந்த 24ஆம் திகதி மானிப்பாய் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் காலிறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும், முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதின. இதில் கிளிநொச்சி மாவட்ட அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின. இதில் மன்னார் மாவட்ட அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின.. இதில் யாழ். மாவட்ட அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதலாவது செட்டை மன்னார் அணியும், இரண்டாவது செட்டை யாழ். மாவட்ட அணியும் கைப்பற்றியிருந்தது. தொடர்ந்து இரு அணிகளுமே மாறி மாறி அடுத்த இரு செட்களையும் கைப்பற்றி சமநிலையில் இருந்தனர். இறுதி செட்டை யார் கைப்பற்றுவது, மாகாண சம்பியனாக யார் வருவது என்பதை இரசிகர்களின் எண்ணங்களில் அதிக கேள்வியை எழுப்பும் வகையில் இறுதி செட்டுக்கு இரு அணிகளும் தயாரானது.இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மாகாணச் சம்பியனானது.

தொடர்ந்து பெண்களுக்கான போட்டிகள் நடைபெற்றது. இதில் காலிறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின. இதில் கிளிநொச்சி மாவட்ட அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. இதில்வவுனியா மாவட்ட அணி முதல் செட்டை இழந்தபோதும் அடுத்து நடைபெற்ற மூன்று செட்களையும் கைப்பற்றி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும்,முல்லை மாவட்ட அணியும்மோதின. இதில் யாழ். மாவட்ட அணி இலகு வெற்றிபெற்றது. 3-0 என்ற நேர் செட் கணக்கில் முல்லை அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பெரும் பரபரப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட வீராங்கனைகளின் சிறப்பான ஆட்டத்தின் முன்விரைவாகவே இறுதிப் போட்டி நிடைபெற்றது. இதில் 25-16, 25- 14, 25 - 10 என செட் கணக்கில் மிக இலகுவாக வவுனியா மாவட்ட அணியைத் தோற்கடித்து மாகாண மட்ட சம்பியனாக யாழ். மாவட்டம் தெரிவானது.

இப்போட்டி நிகழ்வில் வடக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துரை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் உட்பட திணைக்கள அதிகாரிகள், வீர, வீராங்கனைகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

**அமெரிக்கா, தான் ஒரு இராணுவ வல்லரசு என்பதை உலக மக்களுக்கு புரிய வைக்க தேர்ந்தெடுத்த சிறந்த வழிகளில் ஒன்று போர், மற்றொன்று சினிமா.**




# ஹொலிவுட் - அமெரிக்க இராணுவம் கூட்டணி

அமெரிக்காவில் உள்ள ஒரு சிறு நகரம், மதிய நேரம். "டொப் கன்" என்ற திரைப்படம் ஓடும் திரையரங்கின் மக்கள் வெளியேறும் வாசற்படி அருகே அமெரிக்க இராணுவத்தில் சேருவதற்கான விண்ணப்பங்களுடன் இராணுவ அலுவலர்கள் இரண்டு பேர் அமர்ந்திருக்கிறார்கள். இந்த ஊரில் மட்டுமல்ல, அமெரிக்கா முழுவதும் இந்தத் திரைப்படம் ஓடும் ஊர்களில் இராணுவ அலுவலர்கள் இப்படித்தான் காத்திருக்கிறார்கள். ஏன்?

வியட்நாம் போரில் வாங்கிய அடிக்குப் பிறகு சொந்த நாட்டு மக்களே அமெரிக்க இராணுவத்தை எதிர்த்துப் போர் எதிர்ப்பு போராட்டங் கள் நடத்திய போது, அமெரிக்க அரசு ஒன்றை மட்டும் எதிர்பார்க்கவில்லை. அதுதான் இராணுவத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பு. எனவே இராணுவத்தில் போதுமான இளைஞர் கள் சேரவில்லை. என்னதான் ஆக்கிர மிப்புப் போர் என்றாலும் சண்டை போடுவதற்கு ஆள் வேண்டுமே!


**8 ஒஸ்கார் விருதுகளை வென்ற ஹர்ட் லாக்கர் என்ற திரைப்படம் பெண்டகனால் உதவி கள் மறுக்கப்பட்டது. காரணம் எளிமையானது. அதில் ஈராக்கில் உள்ள அப்பாவி மக்களை அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கொல்லும் காட்சி இடம்பெற்றதுதான். இதில் உண்மை ஒரு சிறு துளி அளவுதான் சொல்லப்படுகின்றது. அதையே நிராகரித்து விடுகிறார்கள். அதன்படி 10 இலட்சம் ஈராக் மக்களைக் கொன்றதைப் பற்றி எப்பொழுதுமே ஹொலிவுட்டில் படம் வராது என்பதைத் தனியாகச் சொல்லவேண்டுமா என்ன?**

இந்த நேரத்தில் அமெரிக்க இராணுவத்திற்கு கை கொடுத்த படம் தான் "டொப் கன்". அந்தப் படத்தின் திரைக்கதையை முதலில் பார்த்த போதே இராணுவத்தினர் முடிவு செய்து விட்டார்கள். இந்தப் படம் இளைஞர் களை அமெரிக்க இராணுவத்தைப் பற்றி பெருமை கொள்ளச் செய்யும் என்று. அதனால்தான் படம் திரையிட்ட அரங்குகளில் எல்லாம் விண்ணப்பத்துடன் ஆள் போட்டார்கள்.

"டொப் கன்" திரைப்படத்தின் கதை முழுவதும் அமெரிக்க விமானப் படையின் சாகசங்கள் நிறைந்தது. அதனுடன் தேசபக்தி, காதல், காமம் என சகலமும் கலந்து கட்டிய மசாலா படம்தான் அது. "டொப் கன்" படத்தின் வெற்றி அமெரிக்க இராணுவம் விரிவாவதற்கு உதவியது.

பல நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தி அங்கிருந்து கொள்ளையடிக்கும் செல்வத்தை வைத்து தான் அமெரிக்கா ஒரு வல்லரசாக நீடிக்க முடியும். அதனால் அமெரிக்கா தான் ஒரு இராணுவ வல்லரசு என்பதை உலக மக்களுக்கு புரிய வைக்க தேர்ந்தெடுத்த சிறந்த வழிகளில் ஒன்று போர், மற்றொன்று சினிமா. சினிமாவை வெறும் பொழுதுபோக்காக அமெரிக்க இராணுவமும், பெண்டகனும் பார்க்கவில்லை.

ஹொலிவுட்டில் இருந்து சினிமா எடுக்க வருபவர்கள் என்ன உதவி கேட்டாலும் அமெரிக்க இராணுவம் உடனே செய்யும். அத்தகைய உதவி பெறும் திரைப்படங்களில் போர்க் காட்சிகள் முதல் பல காட்சிகள் பிரமாண்டமாகவும், தத்ரூபமாகவும் இருக்க இதுவே முதல் காரணம். படத்தை இராணுவ களத்திலேயே எடுக்கவும் அனுமதி உண்டு. இராணுவத்தின் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், வாகனங்கள், தளவாடங்கள், கப்பல்கள் ஏன் தேவைப்படுமென்றால் இராணுவ வீரர்களைக் கூட பயன்படுத்திக் கொள்ளலாம். எல்லாம் இலவசம்.



இராணுவம் செய்யும் இந்த உதவிக்கும் ஒரு விலை உண்டு. அவர்களிடம் முதலி லேயே திரைக்கதை யைக் கொடுத்து விட வேண்டும். அவர்கள் சொல்லும் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அமெரிக்க இராணுவத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இராணுவத்தின் மீது மக்களுக்கு மதிப்பு வருவது போல் படம் இருக்க வேண்டும். தவறுகளைச் சுட்டிக் காட்டினால் கூட அது ஒரு குறிப்பிட்ட இராணுவ வீரன் அல்லது அதிகாரியின் தவறு மட்டுமே என்றுதான் கதை இருக்க வேண்டும். படத்தைப் பார்த்தால் அமெரிக்க இராணுவத்தின் பெருமையை எண்ணி அதில் சேர வேண்டும் என மக்கள் நினைக்க வேண்டும் பிற நாட்டு மக்களுக்கு அமெரிக்க இராணுவத்தின் பிரமாண் டத்தைப் பார்த்து பயம் வர வேண்டும்.

இப்படித் தங்களது படைப்புரிமை யைப் பலியிட்டுத்தான் போர்ப் படங்கள் நிறைய வருகின்றன. அதே நேரம் அமெரிக்க இராணுவம் தோற்பது போன்ற ஒன்றிரண்டு படம், அதுவும் பிரமாண்டமாக வருகின்றதே என்று உங்களுக்குத் தோன்றலாம்.

ப்ளாக் ஹொக் டவுண் என்ற படம் 1993ஆம் ஆண்டு ஆபிரிக்க கண்டத்தின் சோமாலிய நாட்டின் மீதான படை எடுப்பைப் பற்றியது. உண்மையில் அங்கு அமெரிக்க இராணுவம் புறமுதுகிட்டு ஓடி வந்தது. அந்தப் படத்தை எடுக்க இராணுவம் உதவி புரிந்தது உண்மைதான். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை விதித்தனர். திரைக்கதை அமெரிக்க இராணுவ வீரர்களின் "தியாகத்தை"த் தூக்கிப் பிடிக்க வேண்டும் கதாநாயகர்களாகக் காட்ட வேண்டும், அவ்வளவுதான். ப்ளாக் ஹொக் டவுண் படத்தைப் பார்த்தால் அதில் அமெரிக்க இராணுவ வீரர்கள் தோல்வி யடைவதை நீங்கள் உணர மாட்டீர்கள் "தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வி" விட்டதாக உச்சுக் கொட்டுவீர்கள். சில பத்து அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதற் காக சில நூறு சோமாலிய மக்கள் கொல்லப்பட்டது குறித்து எந்தக் குற்ற உணர்வுமின்றி, அமெரிக்க இராணுவ வீரனின் கொடூரத்தையே தேசபக்தி, தியாகமாக வியந்தோதும் படம் அது.

ஒலிவர் ஸ்டோன் எனும் இயக்குனர், முன்னாள் இராணுவ வீரர், வியட்நாம் போரில் பங்கெடுத்தவர். வியாட்நாமிற்கு சென்ற போது இராணுவ வீரர்களின் உள்மனப் போராட்டங்களையும், அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளையும், வியட்நாம் மக்களின் துயரத்தையும் நேரில் பார்த்தவர். இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவுடன் இந்த அனுபவத்தையே படமாக எடுக்கலாம் என நினைத்தார். அவரது இயக்கத்தில் ப்ளாட்டுன் படமும் தயாராகத் தொடங்கியது. இவ்வளவுக்கும் இந்தப் படம் அமெரிக்க ஆக்கிரமிப்பை அரசியல் ரீதியாக எதிர்க்கவில்லை, மாறாக அமெரிக்க வீரர்களது உளவியல் துன்பம் என்ற கோணத்தில் மட்டுமே விமரிசித்தது. மேலும் அவருக்கு இராணுவத்திடமிருந்து பெரிதாக எந்த உதவியும் தேவைப்படவில்லை.

அவரது திரைப்படத்தின் கதையை மோப்பம் பிடித்த இராணுவத்தினர் முதலில் அதிர்ச்சி அடைந்தனர். படத்தில் இராணுவ வீரர்கள் கஞ்சா புகைப்பது, சக இராணுவ வீரர்களைக் கொல்லும் சதி, அப்பாவி மக்களைக் கொல்லும் கொடூரம், பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது போன்ற காட்சிகள் ஏராளம் இருந்தன என்று தெரிய வந்தது. விளைவு, அமெரிக்காவில் இருந்தே அவரைத் துரத்தி விட்டார்கள். வேறு வழியின்றி ஒலிவர் ஸ்டோன் அந்தப் படத்தை




இங்கிலாந்து போய் எடுத்தார்.

ஒலிவர் ஸ்டோனுக்கு முன்பு இதே மாதிரி ஒரு படத்தை எடுக்க முனைந்த ஸ்டான்லி க்யுப்ரிக், அவரது படமான ஃபுல் மெட்டல் ஜாக்கட், இராணுவ வீரர்கள் பயிற்சி என்ற பெயரில் அனுபவிக்கும் கொடுமைகள், அவை அவர்களின் மனதைப் பாதித்து, மனநலம் பிறழ்ந்தவர்களாக அதன் பின் போருக்குச் செல்வது, அதனால் சகலரையும் சுட்டுக் கொண்டே செல்வது என்று அமெரிக்க இராணு வத்தைக் கொஞ்சம் விமர்சித்தது.

ஏன், 8 ஒஸ்கார் விருதுகளை வென்ற ஹேர்ட் லொக்கர் என்ற திரைப்படம் பெண்டகனால் உதவிகள் மறுக்கப்பட்டது. காரணம் எளிமை யானது. அதில் ஈராக்கில் உள்ள அப்பாவி மக்களை அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கொல்லும் காட்சி இடம் பெற்றதுதான். இதில் உண்மை ஒரு சிறு துளி அளவுதான் சொல்லப்படு கின்றது. அதையே நிராகரித்து விடுகிறார்கள். அதன்படி 10 இலட்சம் ஈராக் மக்களைக் கொன்றதைப் பற்றி எப்பொழுதுமே ஹொலிவுட்டில் படம் வராது என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.

ராம்போ தொடங்கி இண்டிபெண் டன்ஸ் டே வரை ஏராளமான ஹொலிவுட் படங்களின் பிரமாண்டம் என்பது அமெரிக்க இராணுவம் போட்ட பிச்சைதான். அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமான பெண்டகனும், அமெரிக்க சினிமாவின் தலைநகரமான ஹொலிவுட்டும் இணைந்து நடத்தும் வாண வேடிக்கைதான் இந்தப் படங்கள்.

- நன்றி: புதிய கலாச்சாரம்.

## பேரீச்சம்பழ மகிமை

- பேரீச்சம் பழம் சருமத்தை ஈரப்பதத்துடன் வைக்கும் ஆற்றல் மிக்கது.
- விதை நீக்கிய பேரீச்சம்பழத்தையும் சீனியையும் சேர்த்து மிக்ஸியில் அரைத்து பாலில் சேர்த்துக் குடித்து வந்தால் மலச்சிக்கல் தீரும் எடைகூடும்.
- நாள்தோறும் உணவுக்குப் பின் 2,3 பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் உமிழ்நீர் பெருகி செரிமானம் அதிகரித்து நுரையீரல் கபம் விலகி, தாது விருத்தியடையும்.
- பேரீச்சம்பழத்தை உண்டு வந்தால் இரத்தம் பெருகும், நரம்பு வலுப்பெறும், கண் நோய் கரையும், பல நோய்கள் பறந்தோடும்.
- சில பெண்களுக்கு மாதவிலக்கின்போது கருப்பையில் கோளாறுகள் தோன்றும். அவர்கள் தொடர்ந்து பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் பலன் கிட்டும்.
- சிலருக்கு வாயில் அதிக அளவில் கோழை தோன்றும். பேரீச்சம்பழம் கோழையை அறுத்து வெளியேற்றும்.
- எவ்வித வயிற்றுக் கோளாறு உள்ளவர்களும் பேரீச்சம்பழத்தை நாடினால் போதும்.
- உடல் பொலிவும், வனப்பும் அற்றவர்கள் தொடர்ந்து சில பேரீச்சம் பழம் உண்டு வந்தால், அழகையும், ஆரோக்கியத்தையும் சிறப்பாகப் பெறலாம்.
- பேரீச்சம் பழத்தை வெண்ணெயோடு சேர்த்து சாப்பிட்டு வந்தால் அங்கங்கள் வளரும், வளமையும் பெறும்.
- இல்லற வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் இரவு உணவுக்குப் பின் இரண்டு, மூன்று பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டு, பால் குடிக்கலாம்.



# எரிகற்களின் மோதலால் தங்கம்!



தங்கம் மற்றும் பெருமதிப்பு வாய்ந்த உலோகங்கள் எங்கிருந்து வந்தன என்பது குறித்து புதிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அவை அனைத்தும் அண்ட வெளியிலிருந்து பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமிக்கு வந்தன என்பதுதான் தற்போது விஞ்ஞானிகள் கூறும் செய்தி. இந்தத் தகவல்களை தெரிவித்துள்ளவர்கள் இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள். கிரீன்லாண்டில் நான்கு பில்லியன் ஆண்டுகள் பழமையான படிமங்களை ஆராய்ந்த பிறகே தாங்கள் இந்த முடிவுக்கு வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் படிமங்களில் இருந்த ஐசோடோப்கள், பூமியிலிருந்து உருவான ஐசோடோப்களிலிருந்து தெளிவாக மாறு[illegible]ருந்ததை பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். நாம் வாழும் பூமி சுமார் இருநூறு மில்லியன் வருடங்கள் பழமையானதாக இருக்கும் போது, அண்ட வெளியிலிருந்து வந்த மிகப்பெரிய எரிகற்களின் மோதல் காரணமாக, இன்று நாம் பயன்படுத்தும் பெருமதிப்பு வாய்ந்த இந்த உலோகங்கள் பூமியை வந்தடைந்தன என்கிற கோட்பாட்டை இந்தக் கண்டுபிடிப்பு உறுதிப்படுத்துகின்றது.

பூமியின் ஆரம்பகாலங்களில் இந்த மோதல்கள் காரணமாக கொதித்து உருகிய நிலையில் இருந்த புவியின் மையப் பகுதிக்குள் தங்கம் மற்றும் இதர பெருமதிப்பு வாய்ந்த இந்தத் தனிமங்கள் மூழ்கின என்றும் அந்த ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் நாம் நமது நகைகளில் பயன்படுத்தும் தங்க[illegible]னது எப்படி உருவானது என்கிற கதை[illegible]இன்னமும் ஆச்சரியமாக உள்ளது. இந்தப் பிரபஞ்சத்தில் இதுவரை பார்த்திராத வகையில், அணுவின் ஒரு உட்கருவான நியூட்ரோன்களின் மிகச் சக்தி வாய்ந்த மோதல்களிலேயே நாம் இன்று பயன்படுத்தும் தங்கம் உருவானது என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

# பேய்களின் திருவிழா

திருவிழாக்கள் ஒவ்வொன்றும் ஒரு ரகம். இரவு திருவிழாக்களில் முக்கியமானது “ஹலோவீன்” என்பது. ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 31 ஆம் திகதி இரவு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த திருவிழா கொண்டாடப்படுகிறது.

கோடை முடியும் நேரம், பூமிக்கும் நரகத்துக்கும் இடையே உள்ள தூரம் குறைந்து விடும். எனவே பேய் பிசாசுகள் பூமிக்கு வந்துவிடும் என்பது பண்டைய செல்டிக் மக்களின் நம்பிக்கை. இந்த வரவில் சொந்தக்காரப் பேய்களும் வந்துவிடும் என்பது அவர்கள் நம்பிக்கை. அந்த சொந்தக்காரர்களை தங்கள் வீட்டுக்கு விருந்தினர்களாக கூப்பிட்டு விருந்து வைப்பார்கள். கெட்ட ஆவிகளை வாசலிலேயே துரத்தி விடுவார்கள்.

மோசமான பேய்களை போலவே அன்றைக்கு மக்கள் மாறுவேஷம் போட்டுக்கொள்வார்கள். “அட இது நம்ம ஆளு” என்று கெட்ட ஆவிகள் ஏமாந்து, மனிதர்களை தேடி அடுத்த வீட்டுக்கு போகும். அங்கும் இப்படியே மனிதர்கள் வேஷம் போட்டிருப்பார்கள். இப்படி ஒவ்வொரு வீடாக அடைந்து ஏமாந்து மீண்டும் நரகத்துக்கே அந்த பேய் போய்விடும் என்ற நம்பிக்கையே இந்தத் திருவிழா.

அன்று விருந்துக்கு வரும் ஒவ்வொருவரும் ட்ராகுலா, வம்பையர் என்று பதறவைக்கும் வேஷத்தில் அலறவைப்பார்கள். பூசணிக்காயில் பேய் உருவங்களை செதுக்கி உள்ளே லைற் போட்டு “திகில் எஃபெக்ட்” கொடுப்பார்கள். மண்டை ஓடு கேக், எலும்பு சொக்லேற், இரத்தக் கத்தி என்று இரவு சாப்பாடே மிரட்டலாக இருக்கும்.

ஒரு அறை முழுக்க பிளாஸ்டிக் எலும்புக்கூடுகளை அடுக்கி வைத்திருப்பார்கள். செட்டப் கல்லறைகள், நகரும் நிழல் உருவங்கள் என்று ஆவிகளை அலறவைப்பார்கள். விருந்து முடிந்ததும் திகில் படங்களை பார்த்து கூட்டமாக பயப்படுவார்கள்.

கன்னிப்பெண்கள் “ஹலோவீன்” இரவு அன்று தனியறையில் லைற் எதுவும் போடாமல் கண்ணாடியை பார்த்தால் அதில் எதிர்கால கணவனின் முகம் தெரியுமாம். ஒருவேளை கண்ணாடியில் மண்டை ஓடு தெரிந்தால் அவ்வளவுதானாம். திருமணம் எதுவும் நடக்காமலேயே அந்த பெண் இறந்து விடுவாளாம்.

எந்நேரமும் வேலை வேலை என்று அதிலேயே மூழ்கிப் போகிறவரா நீங்கள்? ஜாக்கிரதை, வேலை சார்ந்த வியாதிகள் தற்போது அதிகரித்து வருகின்றன என்கிறது ஓர் ஆய்வு.

பணியிட பாதிப்பு என்றால், சுரங்கங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள், ஆழ்கடலில் மூழ்கி ஆய்வு செய்வோருக்கு ஏற்படும் காயங்கள், கோழிப்பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் “பேரட் ஃபீவர்” என்றில்லை. “வெள்ளையுடுப்பு உத்தியோகம்” எனப்படும் அலுவலகப் பணிபுரிபவர்களுக்கும் அனேக பாதிப்புகள் ஏற்படலாமாம்.

உங்களின் இருக்கை முறைப்படி வடிவமைக்கப்படாததாக இருந்தால், நீங்கள் 6 முதல் 8 மணி நேரம் கம்ப்யூட்டர் முன் அமர்ந்திருக்கிறீர்கள் என்றால் உங்களுக்கு முதுகுவலி, மணிக்கட்டு வலி உள்ளிட்ட பிரச்சினைகள் வரிசை கட்டி வரும். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் அதை உணர்வது அரிதே.

இந்தப் பாதிப்புக்கு உள்ளாகின்றவர்களில் பாதிப்பேர் ஆயுளை விரைவாக இழக்கின்றனர் என்கிறது புள்ளிவிவரம். மரணத்தை ஏற்படுத்துவதில் பணியிடப் பாதிப்புகள் 10ஆவது பெரிய காரணமாக உள்ளன என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

# வேலையும் உங்கள் உடல்நலமும்




நாள் முழுவதும் உட்கார்ந்து செய்யும் வேலை, புகைப் பழக்கத்துக்கு இணையாக மோசமானது என்கிறார்கள் மருத்துவர்கள். அது நீரிழிவு நோய், இதய நோய், உடல் பருமன் போன்ற பாதிப்புகளுக்கு இட்டுச் செல்லலாம்.

ஒரு நாளைக்கு 6 மணி நேரத்துக்கு மேல் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு, ஓடியாடி வேலை செய்யும் மற்றவர்களை விட அதிக எடை போடும் வாய்ப்பு இரண்டு மடங்காம். மணிக்கணக்கில் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வதால் ஏற்படும் பாதிப்பை உடற்பயிற்சி கூட போக்காது என்கிறார்கள்.

“இருக்கைப் பணி” புரிபவர்கள், ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை 10 நிமிட இடைவெளி எடுத்துக் கொள்ள வேண்டும், சோம்பல் முறிப்பது போன்ற எளிய பயிற்சிகள் கூட நன்மை பயக்கும் என்று ஆலோசனை கூறுகிறார்கள் மருத்துவர்கள்.

# கொள்கைக் குன்றுகள்!





அண்ணாத்துரை திருச்சி வரும் போதெல்லாம் எம்.கே.தியாகராஜ பாகவதரின் பாட்டை விரும்பிக் கேட்பார். ஒருமுறை “சிவ பெருமான் கிருபை வேண்டும், வேறென்ன வேண்டும்” என்ற பாட்டை எம்.கே.டி. அழுத்தம் கொடுத்துப் பாடினார். உடனே அண்ணா, “யாருக்குச் சிவன் கிருபை வேண்டும்” என்றார். “உங்களுக்குத்தான்” என்றார் பாகவதர். “அது உங்களுக்கே இருந்தால் சரி, எனக்கு வேண்டாம்” என்றார் அண்ணா.

பட வாய்ப்பில்லாதபோது பாகவ்தருக்கெனவே சிரமப்பட்டு கதை எழுதி படத்தில் அவரை நடிக்கச் சொன்னார் அண்ணா. “வாழ்விலும் சினிமாவிலும் தெய்வபக்தி உள்ளவனாகவே வாழ்ந்துவிட்டேன். தெய்வ மறுப்புள்ள உமது படக் கதாநாய்கனாக என்னால் நடிக்க முடியாது” என்று மறுத்துவிட்டார் எம்.கே.டி. பின்னர் கே.ஆர்.ராமசாமி நடித்து அந்தப் படம் வெளிவந்தது. படத்தின் பெயர் : “சொர்க்க வாசல்”. அவரவர் கொள்கையில் இருவரும் உறுதியாக இருந்தாலும் இவர்கள் நட்பு பலமாகவே இருந்தது.

# தொலைபேசி உருவான கதை

தொலைபேசி பிறந்த கதை உங்களுக்குத் தெரியுமா? இங்கு தொலைபேசி எனக் குறிப்பிட்டது தற்போது கோடிக்கணக்கான மக்களின் பாவனையிலுள்ள கைத்தொலைபேசிகள் அல்ல.

தற்போது பாவனையிலுள்ள தொலை பேசிகள் யாவும் உலகத்தில் நடப்பவற்றை உடனுக்குடன் பார்க்கக் கூடியவையாக உள்ளன. எனினும், பிறவியிலேயே காது கேட்கும் திறனும் வாய் பேசவும் இயலாத நிலையில் உதட்டின் அசைவுகளை வைத்து எப்படி சொல்ல வந்த கருத்தை விளக்கலாம் என நூல் எழுதிப் புகழ்பெற்ற அலெக்சாண்டர் மெல்வில்பில் என்பவரின் மகனான அலெக்சாண்டர் கிரஹம் பெல் தொலைபேசிகளை எமக்கு அறிமுகப்படுத்திய முதல் மனிதராவார்.



அமெரிக்காவிலுள்ள செவிடர் ஊமைப் பள்ளியின் ஆசிரியராக 1878ஆம் ஆண்டு சேர்ந்த பெல், செவிட்டுத் தன்மையை நீக்கி ஒலி உணர்வதற்கான சாதனம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். காது கேட்கும் திறனற்றவர்களை செயற்கைக் காதினால் கேட்க வைக்க முடியுமா? என்ற கோணத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட அவர், உந்துதல் ஏற்பட பிணங்களிலிருந்து காதினை அறுத்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

தனது உதவியாளரான தோமஸ் வொட்சன் என்பவருடன், பொஸ்டன் நகரில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் கம்பி மூலம் ஒலியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்.



1874ஆம் ஆண்டு கிரஹம் பெல் மாடியில் ஒரு அறையிலும் வொட்சன் கீழே ஒரு அறையிலும் அமர்ந்தனர். இயந்திரம் முன்பிருந்து சில மாற்றங்களைச் செய்தார் கிரஹம் பெல். எதிர்பார்த்தபடி இயந்திரம் வேலை செய்யவில்லை. எனவே, வெறுப்பில் கோபத்தில் எழுந்தார். அருகிலிருந்த அமிலக் குடுவை கீழே சாய்ந்து அவரது உடையில் கொட்டியது. உடனே, உதவிக்கு வரும்படி வொட்சனை உரக்கக் கத்தி அழைத்தார்.

பெல் அழைத்தது கீழே அறையிலிருந்த வொட்சனுக்குக் கேட்டது. காரணம் ட்ரான்ஸ்மிசன் என்னும் இயந்திரத்தின் முன் நின்று பெல் கத்தினார். இவ்வளவு விரைவில் ஆராய்ச்சியின் பயன் கிடைத்ததை எண்ணி வொட்சனும், கிரஹம் பெல்லும் மகிழ்ந்தனர்.

மக்களிடம் தங்கள் கண்டுபிடிப்பை எடுத்துக்கூறிய போது யாரும் நம்பவில்லை. பின்பு பிலடெல்பியாவில் ஆய்வு செய்து காட்டினர். விக்டோரியா மகாராணியார் முன்பு செயல்படுத்திக் காட்டினர்.

இதற்கிடையே பலர் தொலைபேசியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். எனவே, காப்புரிமைக்காக கிரஹாம் பெல் போராட வேண்டியிருந்தது. பல ஆராய்ச்சிகளுக்குப் பின் தொலைபேசியை அறிமுகப்படுத்தினார். அப்போது தொலைபேசி வசதி வேண்டி விண்ணப்பித்தோர் 8 பேர்களே. 1922இல் பெல் இறந்த போது அமெரிக்கர்கள் தொலைபேசிகளை ஒரு நிமிடம் இயங்காமல் வைத்து அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

இன்றைக்கு தொலைபேசியின் வடிவங்களும், வகைகளும் ஏராளம் வரத்தொடங்கியுள்ள போதிலும், அலெக்சாண்டர் கிரஹம் பெல்லை அனைவருமே ஞாபகத்தில் வைத்துள்ளனர்.

- சிகரம் -

# வலுவிழந்தோர் வாழ்வில் வசந்தம் வீச அறிமுகமாகிறது சிகிச்சை முறை

யுத்தம் ஓய்ந்த வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, நாடு முழுவதும் இப்போது ஊனமுற்றவர்கள் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். இதைவிட, யுத்தம் காரணமாகவும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் காரணமாக மனநோயாளிகள் அதிகளவில் உருவாகியுள்ளனர். இவர்களின் வாழ்விலும் வசந்தம் வீச வேண்டும் என்பதற்காக சிகிச்சைமுறை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றது.

சுயாதீன வாழ்க்கை முறைமை ஊனமுற்றோரை எழுந்து நடக்க வைக்கும் என்ற கோட்பாடு எம்மில் எத்தனை பேருக்கு தெரியும் என்பது இன்னமும் புரியாத புதிராக இருக்கின்றது.

ஊனமுற்றோரைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு தேவையானவற்றை கவனிக்க அவர்களுக்கு மிகுந்த அன்பு செலுத்த யார் முன் வருகிறார்களோ அவர்களால்தான். ஊனமுற்றோரை 100 வீதம் மன நிலை ரீதியாக குணமடையச் செய்ய முடியும்.

அவ்வாறு செய்வதற்கு மிகவும் உகந்ததாக விளங்குகின்றது இந்த தொழில் வழிச்சிகிச்சை முறை. தொழில வழிச் சிகிச்சை முறை என்பது முதலாம், இரண்டாம், உலக யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்டது. இதில் பல வகையான சிகிச்சை முறைகள் அடங்குகின்றன.

ஆரம்பத்தில் இச்சிகிச்சை முறை மேற்கத்தைய நாடுகளில் உருவாக்கப்பட்டது.

எர்கோ (Ergo) சிகிச்சை முறை என்னும் இதை அழைப்பது வழக்கம் லத்தீன் மொழியில் எர்கோ என்றால் தொழில் என்று அர்த்தம்.

இச்சிகிச்சை முறை மூலம் பலரது வாழ்க்கையினை மேம்படுத்த முடிந்துள்ளது. இச் சிகிச்சையின் மூலமாக பௌதிக மற்றும் மனநிலை தொடர்பான வியாதிகளையும் குணப்படுத்த முடியும்.

ஆசிய நாடுகளில் இச்சிகிச்சை முறை 1948ஆம் ஆண்டு இந்திய சிகிச்சையாளரான கமலா எம் றிம்கான் என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல்வேறு நாடுகளிலும் இத்தொழில் வழிச் சிகிக்சை முறை வேகமாகப் பரவியுள்ளது.

எமது நாட்டில் முதன்முதலாக, அங்கோடை, முல்லேரியா, வெலிசறை மார்பு வைத்தியசாலை, ஹெந்தலை தொழுநோய் வைத்தியசாலை, மகந்தீவு தொழுநோய் தங்குமிடம் ஆகியன நிறுவப்பட்டன.

அங்கோடை வைத்தியசாலை ஆரம பிக்கப்பட்ட பின்னர் அங்கு இச்சிகிச்சைப் பிரிவு இயங்கியது. இதன் பின்னர் டாக்டர் அத்துகோரள அவர்கள் வெலிசறை மார்பு வைத்திசாலையிலும இச் சேவையினை ஆரம்பித்து வைத்தார்.

இதன் பின்னர் பல காலமாக இலங்கையில் தொழில் வழிச்சிகிச்சையாளர்கள் எவரும் பயிற்றப்பட்டவில்லை.

இதன் தேவையை உணர்ந்த முன்னாள் சுகாதார அமைச்சர் காமினி ஜெயசூரிய மற்றும் முன்னாள் சுகாதார பணிப்பாளர் ஜேசுதாசன் ஆகியோரின் முயற்சியினாலும் 1976 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1ஆம் திகதி இலங்கையில் மீண்டும் இப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.



முதன் முதலாக 70 பேர் பயிற்சியாளர்களாக இணைக்கப்பட்டனர். அதன பின்னர் குறைந்த எண்ணிக்கையானோரே இணைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 108 தொழில் வழிச்சிகிச்சையாளர்கள் இலங்கை மற்றும் மேற்கத்திய நாடுகளில் சேவை செய்கின்றனர்.


இந்த தொழில் வழிச் சிகிச்சையாளர்கள் இலங்கையில் தற்போது கொழும்பு, ராகம புனருத்தாரன வைததிசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் இலங்கை மன நோய் வைத்தியபிரிவுகளிலும் சேவையாற்றுகின்றனர். இவை தவிர, இலங்கையில் உள்ள அனைத்து போத்னா வைத்திசாலைகளிலும் தற்போது இச்சிகிச்சைப்பிரிவு செயற்படுகிறது.

இத்தொழில் வழிச் சிகிச்சை விசேட வைத்தியத்துறையாக இருப்பதால், மாகாண மட்ட வைத்தியத்துறை சார்ந்ததாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**தொகுப்பு: சுமித்தி.**

தொழில் வழிச் சிகிச்சையானது இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வருமானால் ஊனமுற்றோர்களையும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களையும் மேன்மை அடைய வழி வகுக்கும்.

# பக்கவாதம்




கழுத்தின் இரண்டுப் பக்கங்களின் வழியாகத் தலைக்குச் செல்லும் கழுத்துத் தமனிகள், இதயத்திலிருந்து மூளைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லுகின்றன. பெரிதாக உள்ள இந்த இரண்டு தமனி இரத்தக் குழாய்களும் படிப்படியாக பல கிளைகளாகப் பிரிந்து நுண்ணிய இரத்தக் குழாய்களாக மாறி, மூளையின் எல்லாத் திசுக்களுக்கும், அவை செயல்படத் தேவையான பிராணவாயுவையும், பிற ஊட்டச் சத்துகளையும் வழங்குகின்றன. இதனால் மூளையின் அனைத்து பாகங்களும் முறையாகச் செயல்படுகின்றன.

இப்படி மூளைக்குச் செல்லும் இந்த பெரு மற்றும் சிறு இரத்தக் குழாய்களில் இரத்த ஓட்டம் குறையும் போதோ அல்லது தடைபடும் போதோ, மூளையின் திசுக்களுக்குத் தேவையான பிராண வாயுவும், பிற ஊட்டச் சத்துகளும் கிடைப்பது தடைப்படுகிறது. இதனால், அவை செயல் இழக்கத் துவங்குகின்றன. மூளையில் செயல் இழந்த அந்த பகுதியின் தாக்கம், உடல இயக்கத்தையும் பாதிக்கிறது. இதனால் பக்கவாதம்(Stroke)ஏற்படுகிறது.

'ஸ்ட்ரோக்' என்றால் கிரேக்க மொழியில், 'தடைப்படுதல்' என்று பொருள். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படுவதால், இப் பாதிப்பை Stroke என்கிறோம். தமிழில் இதை, 'பக்க வாதம்' என்கிறோம். ஏனென்றால், மூளையின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக உடலின் ஒரு பகுதி செயல்படாமல் போகிறது.

80 சதவிகித பக்க வாதம், மூளையிலுள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும 'அடைப்பு' காரணமாகவே ஏற்படுகிறது. இது, இரத்தக் குழாயின் உட்பகுதி தடிப்பாகுவதாலோ அல்லது கொழுப்பு, கல்சியம், சிவப்பணுக்கள் மற்றும் இரத்த உறை பொருட்கள் போன்றவை இரத்தக் குழாய்களின் உட்சுவர்களில் படிந்து, அதன் குறுக்களவு குறைவதாலோ ஏற்படுகிறது.

20 சதவிகித பக்க வாதம், மூளையில் இரத்தம் கசிந்து தேக்கமடைவதால் ஏற்படுகிறது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்:

1.உயர் இரத்த அழுத்தம் (Hypertension).

2. மூளையிலுள்ள இரத்தக் குழாய்கள் வீக்கமடைவது (Aneurysm).

பக்கவாதம் ஏற்படுவதற்கான சில முக்கிய காரணங்கள் :

**1. பாரம்பரியம் :**

பக்க வாதம் ஏற்பட பல்வேறு காரணங்கள் உள்ளன. இதில் மரபணுவின் பங்கும் கண்டிப்பாக உள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. பக்கவாத குறைபாடு உள்ள குடும்பங்களில் பிறக்கும் அடுத்த தலைமுறையினருக்கும், பக்க வாத பாதிப்பு ஏற்படும் சாத்தியக் கூறு நிறையவே உள்ளது.

**2. உயர் இரத்த அழுத்தம் :**

வயது கூடக் கூட இரத்த அழுத்தமும் அதிகரிக்கும். ஆனால், கீழ்கண்ட காரணங்களாலும் உயர் இரத்த அழுததம் ஏற்படுகிறது.

உடல் எடை கூடுதலாக இருப்பது அல்லது உடல் பருமனாக இருப்பது. உணவில் உப்பின் அளவு கூடுவது. அளவுக்கதிகமாக மது அருந்துவது.

சிறுநீரகக் கோளாறு ஏற்படுவது.

ஒரு சில அலோபதி மருந்துகளின் பக்க விளைவு. மனதில் 'பதட்டம்' நிலவுவது. உயர் இரத்த அழுத்தத்தால், மூளையிலுள்ள இரத்தக் குழாய்கள் வெடித்து, மூளைத் திசுக்களில் இரத்தக் கசிவு ஏற்படுவதால் பக்க வாதம் உண்டாகும்.

**3. புகைத்தல் மற்றும் புகையிலையை பயன்படுத்துதல் :**

இரத்தக் குழாய்களில், கொழுப்புப் படிந்து, 'அடைப்பு' தோன்றுவதற்கு புகைத்தல் மற்றும் புகையிலைப் பழக்கமும் ஒரு காரணமாகும். மேலும், புகையிலையைப் பயன்படுத்துவதால், இதயத் துடிப்பும் மற்றும் இரத்த அழுத்தமும் உயரும் வாய்ப்பு அதிகமுள்ளது. புகை பிடிப்பதினால், 'காபன் மோனொக்ஸைட்' வாயு இரத்தத்தில் கலந்து, இரத்தத்தில் உள்ள ஒட்சிசனின் அளவு குறைகிறது.

**4. அதிக உடல் எடை மற்றும் உடற்பருமன் :**

'உடல் எடை' மிகுதியாக இருப்பது நமது தினசரி வேலைகளை கவனிப்பதற்கு தடையாக இருப்பதோடன்றி பல்வேறு உடல் பாதிப்புகளையும் ஏற்படுத்திவிடும். இதயத் துடிப்பு அதிகரிகக்கும். இரத்த அழுத்தமும் உயரும். நீரிழிவு ஏற்படும். ஆகவே தான் அதிக உடல் எடையும் மற்றும் உடற்பருமனும் உள்ளவர்களுக்கு இதய நோய்கள் மற்றும் பக்கவாதம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

**5. நீரிழிவு நோய் :**

இந்நோயினால் இதய பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, கண்கள் பாதிப்பு, நரம்புகள் பாதிப்பு என பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படும். இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிப்பதால், உடலின் அமிலத் தன்மை அதிகரித்து, 'நினைவிழப்பு' ஏற்படும். மேலும், மூளையிலுள்ள இரத்தக் குழாய்கள் பாதிப்படைந்து பக்க வாதமும் ஏற்படும்.

**6. இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிதல் :**

இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

புகைத்தல் மற்றும் புகையிலைப் பழக்கம். ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம். சோம்பேறித்தனமான வாழ்க்கை முறை.

இரத்தத்தில் கொழுப்பின் அளவு அதிகரிக்கும் போது, அவை இரத்தக் குழாயின் உட்சுவர்களில் கொஞ்சம் கொஞ்சமாக படிய ஆரம்பிக்கும். இதனால், இரத்தக் குழாயின் குறுக்களவு கணிசமாகக் குறைந்து, இரத்த ஓட்டமும் குறைந்து விடும். இதனால் இதயத்துக்கு வேண்டிய பிராணவாயு குறைந்து, 'மாரடைப்பு' (Heart Attack) ஏற்படும். இதே போல, மூளைக்கு அவசியமான பிராண வாயு குறைந்து 'பக்க வாதம்' (Stroke) ஏற்படும்.

**7. சோம்பேறித் தனமான வாழ்க்கை :**

உங்கள் உடல் இயக்கம் சுறுசுறுப்பாக இல்லாத போது, உங்களுக்கு பக்க வாத பாதிப்பு ஏற்படும் சாத்தியம் அதிகரிக்கிறது. சுறுசுறுப்பாக நீங்கள இருக்கும்போது - உங்கள் உடல் எடை சீராக இருக்கும் வகையில், உங்கள் உடலில் சேரும் இனிப்பும், கொழுப்பும் பயன்பட்டு விடுகிறது.

**பக்க வாதத்தின் அறிகுறிகள் :**

**1.பொதுவான அறிகுறிகள் :**

பக்க வாதம் ஏற்படுவதற்கு முன்பாக சில அறிகுறிகள் தோன்றும். அப்போதே நாம் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அப்படிப்பட்ட சில முக்கியமான அறிகுறிகளாவன:

1. உடலின் ஒரு பகுதி அல்லது முகம், கை, கால்களில் மரத்துப் போனது போன்ற உணர்வு.

2. திடீரெனப் பார்வை தெளிவில்லாமல் போவது.

3. நடந்து செல்லும்போது, திடீரென தலைச் சுற்றல், தடுமாற்றம் போன்றவை ஏற்படுவது.

4. திடீர் குழப்பம், பேச்சுக் குழறல், பிறர் பேசுவதைப் புரிந்துக் கொள்ள இயலாமை.

5. கடுமையான திடீர்த் தலைவலி.

6. தான் எங்கிருக்கிறோம் என்ற உணர்வு இல்லாமல் போவது.

ஒரு முறை பக்க வாதம் வந்த பிறகு, மறு முறையும் பக்க வாதம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்திலேயே காலம் தள்ள வேண்டிய அவசியம் இல்லை. நமது வாழ்க்கை முறையில், சில மாற்றங்களைச் செய்துக் கொள்வதன் மூலம் கண்டிப்பாக, பக்க வாதம் மறுபடியும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

உங்களை ஆரோக்கியமாக வைததிருக்கவும், நிம்மதியான உறக்கத்தைப் பெறவும், உங்கள் மன நிலையை மேம்படுத்தவும் நீங்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டியது அவசியமாகும்.

நடத்தல், வீட்டு வேலைகளைச் செய்தல், குழந்தைகளுடன் விளையாடுதல் போன்ற உங்கள் தினசரிக் கடமைகளை ஒழுங்காகச் செய்யவும். உங்கள் வயது என்னவாக இருந்தாலும், தினசரி சுறுசுறுப்பாக இயங்கினாலே, உங்கள் ஆரோக்கியத்திலும், மன நலனிலும் மேம்பாடு ஏற்படும்.

உங்கள் தினசரி வாழ்க்கையில் சில சிறு மாற்றங்களைச் செய்தாலே போதும். மாடிக்குச் செல்ல மின் தூக்கிகளைப் பயன்படுத்தாமல், படியேறிச் செல்லலாம். அருகில் உள்ள இடங்களுக்கு, வாகனத்தில் செல்லாமல் நடந்தே செல்லலாம். எல்லாவற்றையும்விட மிக முக்கியம், நீண்ட நேரம் நீங்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் அமராதீர்கள்.

# வீதி அபிவிருத்தியில் இணையாமைக்கு சம்பளப்பிரச்சினையே காரணம்
## – தொழிலாளர்கள் தெரிவிப்பு

(ஜெயந்தி - சிகரம்)

ஏ32 வீதியின் அபிவிருத்திப் பணி யில் நாம் இணைந்து கொள்ளாமைக்கு சம்பளப் பிரச்சினையே முக்கிய காரணம் என இந்த வீதி அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் அனுசரணையுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நாவற்குழி - கேரதீவு வீதியான ஏ-32 வீதி புனரமைப்புப் பணிகளை மாகா தனியார் நிறுவனம் பொறுப்பெடுத்துள்ளது.

எனினும், இந்த வீதியின் அபிவிருத்திப் பணிகளில் தென்னிலங்கைத் தொழிலாளர்களே அதிகளவில் காணப்படுகின்றனர்.

கடந்த 2011ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வீதி அபிவிருத்திப் பணியில், இந்த வீதி ஊடறுத்துச் செல்லும் நாவற்குழி, தச்சன்தோப்பு, கைதடி மற்றும் மறவன்புலோ ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். எனினும், தற்போது இந்த வீதிப்புனரமைப்புப் பணிக்கு இந்தக் கிராமங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபடுவதில்லை.

காலை ஏழுமணியிலிருந்து மாலை நான்கு மணிவரைக்கும் வேலை நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் 10 மணித்தியாலய வேலைக்கு கூலியாக நாளொன்றிற்கு 300 ரூபாவிலிருந்து 350 ரூபா வரைக்கும் வழங்கப்பட்டதுடன் மதிய உணவுக்காக அசைவம் எனின் 60 ரூபாவும், சைவம் எனின் 40 ரூபாவும் கழிக்கப்பட்டு மீதிப் பணமே அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பத்து மணித்தியாலயங்கள் தவிர்ந்த மிகுதி நேரத்தில் அதாவது காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி தவிர்ந்த நேரங்களில் மாலை 5 மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் வேலை செய்வதற்கு மணித்தியாலயத்திற்கு 50 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

கடுமையான வெயிலுக்கு மத்தியில் மிகுந்த கஷ்டப்பட்டு செய்யும் வேலைக்கு குறைந்த அளவிலேயே சம்பளம் கிடைப்பதனாலேயே இந்த வேலைக்குச் செல்வதில்லை என அந்தக் கூலித் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி வேலைக்குச் சென்று வந்த கூலித்தொழிலாளி ஒருவரைக் கேட்டபோது; நான் காலை 6 மணியிலிருந்து இரவு எட்டு மணி வரைக்கும் வேலை செய்யச் சென்றேன். ஆனால் எனக்கு ஒரு நாட்கூலியாக 400 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை யுமே கூலி கிடைத்தது. அத்துடன், முதல் மாதச் சம்பளம் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னரே எங்களுக்குக் கிடைக்கும். கிட்டத்தட்ட 14 மணித்தி யாலயங்கள் வேலை செய்துள்ள போதிலும், சம்பளம் மிகக் குறைவாகக் கிடைத்தது. இதனாலேயே இந்த வேலைக்கு நான் தற்போது செல்வதில்லை என அவர் குறிப்பிட்டதுடன், எங்களு டைய வீடுகளிற்குப் பக்கத்தில் வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெறுவதால் எமக்கு வேலைக்குச் செல்வதில் போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்படுவ தில்லை. ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலிருந்து வேலைக்கு வருபவர்கள் 2000 முதல் 2500 ரூபா வரைக்கும் பயணத் திற்காக செலவிடுவதாகவும் இதனாலேயே இந்த வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்ட பெரும் பாலான இளைஞர்கள் தற்போது செல்வதில்லை எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை கோவிலாக்கண்டி சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட காப்பெற் வீதி அமைக்கும் பணியானது தற்போது மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயத்திற்கான பாடசாலை வீதியையும் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரிக்கு இராணுவத்தினரால் உபகரணங்கள் அன்பளிப்பு

(சிகரம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கு இராணுவத்தினர் 1.35 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கான 300 கதிரைகள், 300 பாடசாலை மேசைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான 25 கதிரைகள் 25 மேசைகள் என்பன இவற்றுள் அடங்குகின்றன.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் வேண்டுகோளுக்கமைய பிரபல வர்த்தகரும், கொடையாளருமான தேசமான்ய கென் பாலேந்திரா இந்த அன்பளிப்பிற்கான நிதியை வழங்கியுள்ளார்.



இதேவேளை, தேசமான்ய கென் பாலேந்திராவின் 24 மில்லியன் ரூபா நிதி உதவியுடனும், யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இராணுவ வீரர்களின் பங்களிப்புடனும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கு, வகுப்பறைகள், கலைகூடம் மற்றும் பார்வையாளர் அரங்குடன் கூடிய மூன்று மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்த அன்பளிப்புகளை கையளிக்கும் நிகழ்வில், வட மாகாண கல்வி, கலாசார மற்றும் விளையாட்டுத்துறைச் செயலாளர் எஸ்.சத்தியசீலன், 51ஆவது படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் பியல் விக்கிரமரத்ன, வலிகாமம் கல்விப் பணிப்பாளர், 515ஆவது படையணித் தலைமையகத்தின் தளபதி பிரிகேடியர் புவனேக ரன்தெனிய, மகாஜனாக் கல்லூரியின் அதிபர் வேல்சுபநாதன் மற்றும் முன்னாள் அதிபர் ஆனந்தசயனன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சின்ன வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி

(கிரு-சிகரம்)


திருநெல்வேலி சந்தையில் கடந்த ஒரு வாரமாக 130ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் 40 ரூபாவினால் குறைந்து 90 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதேவேளை பெரிய வெங்காயத்தின் விலை 130 ரூபாவாகவே விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது சின்ன வெங்காயம் அதிகமாக அறுவடை செய்யும் காலம் என்பதால் அதிகளவான சின்ன வெங்காயம் விற்பனைக்கு வந்துள்ளது. இதனாலேயே இவ்வாறு விலைகுறைந்துள்ளதாக குறிப்பிட்ட வியாபாரி ஒருவர், தற்போது யாழ். மாவட்டத்திற்கு வேறு மாவட்டங்களில் இருந்தும் வெங்காயம் வருவதனாலும் இங்கு வெங்காயத்தின் விலை வீழ்ச்சிக்கு மற்றுமொரு காரணம் என்றார்.



வங்கிகளில் கடன்களைப் பெற்றே விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நிலையில், அதிகரித்துச் செல்லும் பொருட்களின் விலையேற்றத்தால், அதிகளவான நிதியை செலவிட்டு பயிர்செய்கையில் ஈடுபடமுடியாதுள்ளது. அதுமட்டுமன்றி வங்கியில் பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத துவதற்கு வீட்டிலுள்ள நகைகளை அடகு வைக்க வேண்டியுள்ளது. இவற்றினாலேயே விவசாயத்தை கைவிடவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவிவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார்.

# மெய்தான் பாருங்கோ...
## ‘சமூகக் கொல்லிகள்’



ஒவ்வொரு மனிசனுக்கும் வாழ்க்கையில ஒவ்வொரு அடிப்படைத் தேவைகள் இருக்கத்தான் செய்யும் பாருங்கோ. அந்த அடிப்படைத் தேவைகளுக்காக அவனவன் அன்றாடம் ஆயிரம் போராட்டங்களைப் போராட வேண்டியும் இருக்குது கண்டியளே!

நாளாந்த உழைப்பாளி ஒருவனுக்கு ஒருநாளில தொழில் இல்லையெண்டால் அவன்ர வீட்டில அண்டைக்கு அடுப்புப் புகையாது எண்டது எல்லாருக்கும் தெரிஞ்ச உண்மை பாருங்கோ!

இப்பிடித்தொழில் இல்லாத பிரச்சினையளோடை, துயரம் தீராப்பிரச்சினையள்... இருக்க இடமில்லாத பிரச்சினையள்... போருக்கை இனசன பந்துக்களைப் பறிகொடுத்த கவலையள்... பிள்ளையளுக்கான படிப்பு... உடுதுணி... மருந்துச் சிலவுகள்... எண்டு ஒவ்வொருவனுக்கும் ஏதோ ஒரு வகையில ஒரு பிரச்சினையள் உருவாகி... அதற்காக அவன் போராடிக்கொண்டுதான் இருக்கிறான் பாருங்கோ!.

இப்பிடி வாழ்க்கையோட போராட்டம் நடத்துற மனிசருக்கு நடுவில இன்னுமொரு கொஞ்சப் பேரும் போராடிக் கொண்டுதான் இருக்கினம். இவையளின்ர போராட்டத்தைக் குறிச்சு அறிவு பூர்வமாக... ஆழமாகச் சிந்திக்கிற மனிசருக்கு இவையள் மீது அனுதாபம் வராது. ஆத்திரமும் அருவருப்பும்தான் வரும் கண்டியளே!

ஏனெண்டால் பாருங்கோ! இவையள் வந்து தம்மைச் சுற்றியுள்ள சமூகத்தைப் பற்றியோ... அதின்ர எதிர் காலத்தைப் பற்றியோ... கொஞ்சங்கூடக்கவலைப்படுகிறது கிடையாது. இவையளின்ர செய்கைகாரியங்கள் அனைத்தும் சுயநலத்தின் வெளிப்பாடாய், தற்கால வாழ்வுக்கான சுகஜீவியமாய்தான் அமைஞ்சிருக்கு எண்டதும் பொய்யில்லைக் கண்டியளே!

இதில நான் என்ன சொல்லவாறன் எண்டால், “எரிகிற வீட்டில பிடுங்கி எடுக்கிறதுதான் இலாபம்...” எண்டு சொல்லுறமாதிரி சிலபேர் பாருங்கோ சனத்தின்ர அவலத்தை வைச்சு அரசியல் வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கினம். வேறசில ஆட்கள் அவையளின்ர அந்தரிச்ச சீவியத்துக்குள்ள நிண்டு கொண்டு சில அராஜகத்தனமான செயற்பாடுகள்... நடவடிக்கையள்ள ஈடுபட்டு வருகினம்.

வயசு குறைஞ்ச, அதுவும் படிக்கிற பள்ளிக்கூடப் பெடியள் எண்டு தெரிஞ்சும் அந்தப் பிள்ளையளுக்கு சிகரெட் குடுக்கிற கடைக்காரர்மார்... சட்டத்துக்குப் புறம்பான வகையில் கசிப்புக் காய்ச்சி வியாபாரம் செய்யிற ஆட்கள்... காலாவதியாகிப் போன மருந்துச் சாமானுகளை வைச்சிருந்து விபரம் தெரியாமல் வருகிற ஆட்களிட்டை வித்துத்தள்ளுற பார்மசிக்காரர்... கடவுளின்ர பேரால றோட்டுகள், தெருவுகளில உண்டியல் குலுக்கி அந்தக் காசை தனியுடமையாக்கிக் கொள்ளுகிற ‘பக்த அடியார்கள்’... எண்டு இப்படி எத்தனையோ வகை தொகையான ஆட்களைச் சொல்லலாம் பாருங்கோ!

இப்படிப்பட்ட ஆட்கள் வந்து பாருங்கோ! தாங்கள் செய்யிறது சில வேளைகளில பிழையான காரியமெண்டு மனசாட்சிக்குத் தெரிஞ்சாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அந்தந்த நேரத்துக்கு... நாளுக்கு... காலத்துக்கு... சந்தோஷமாக இருந்தால் காணும்... எண்டு நினைக்கினம். ஆனா, அதால ஏற்படுகின்ற சீரழிவுகள், துன்பங்கள், துயரங்கள் குறிச்சு அடுத்தவன் அனுபவிக்கட்டும் நமக்கென்ன... எண்ட மனப்பான்மையோட இருந்திடுகினம் கண்டியளே!

வாழ்க்கையொரு போராட்டம்... எண்ட காலம் மாறிப் போய், இப்ப போராட்டமே வாழ்க்கையாப் போன நிலையில, இப்படியான ‘சமூகக் கொல்லிகள்’ வந்து முளைச்சு, வயித்துப் பிழைப்புக்கு நேர்மையாய் போராடுகிறவனுக்கு நித்தம் நித்தம் உபத்திரவத்தைக் குடுக்கினம் பாருங்கோ!

நீண்ட கால பிரயாசம் எண்டைக்காவது ஒரு நாளைக் கெண்டாலும் நிமிந்து நிற்கும் எண்ட உண்மையைத் தெரிஞ்சவன் நிதானமாக நடக்கிறான். அற்ப சாவைக் கண்டு அலறுபவன்தான் இப்படியான அருவருப்பான காரியங்களில ஈடுபட்டு, அளவுக்கதிகமாக பொருளும் புகழும் தேட முனைகிறான்... எண்டது பொய்யில்லைப் பாருங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# மாணவர் கல்வித்தரத்தை மேம்படுத்த றோயல் கல்லூரி நூலகம் அன்பளிப்பு



(மல்லாகம்)

மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கிலும், நட்புறவுவை வெளிப்படுத்தும் முகமாகவும் கொழும்பு றோயல் கல்லூரி ஒன்றியம், யாழ்.மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கு சிறந்ததொரு நூலகத்தை நன்கொடையாக வழங்கியுள்ளது.

513 ஆவது சிவில் விவகார அலுவலகத்தின் வேண்டுகோளுக்கமையவே இந்நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இப் படைப்பிரிவினர் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் கல்வி சார் அதிகாரசபைகளுடன் இணைந்து மாணவர்களது கல்வியை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். மேலும் இந்நூலகத்தை அமைப்பதற்காக பாடசாலையின் பழைய வகுப்பறையொன்றை 14 ஆவது கெமுனு வோச் படைப்பிரிவினர் புனர்நிர்மானம் செய்தனர்.

ரூபா 400,000 பெறுமதியான கட்டட உபகரணங்கள், தளபாடங்கள், கணினி மற்றும் புத்தகங்கள் ஆகியவையும் இப்பாடசாலைக்கு றோயல் கல்லூரி ஒன்றியத்தால் வழங்கப்பட்டது. றோயல் கல்லூரி அதிபர் உபாலி குணசேகர இந் நூலகத்தின் கட்டடத் தொகுதியை குளமங்கால் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். இந் நிகழ்வில் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந் நல்லிணக்க செயற்பாட்டிற்கு குளமங்கால் வித்தியாலய அதிபர் திருமதி ஆர்.ஜே.அந்தோனிமுத்து தனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

நூலகத்தை அமைத்துக் கொடுப்பதன் மூலம் மாணவர்களது கல்வித்தரத்தை மேம்படுத்த உதவுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திதந்த யாழ்.கட்டளைத் தளபதிக்கு றோயல் கலலூரி அதிபர் தனது நன்றிகளை தெரிவித்தார்.

இவ்விதமாக உதவிகள் மூலம் வடக்கு மற்றும் தெற்கு மாணவர்களுக்கு இடையே சிறந்ததொரு நட்புறவு பாலத்தை ஏற்படுத்தி புரிந்துணர்வை வளர்க்க முடியும் என்றும், இது நாட்டில் சமாதானத்தை நிலைத்திருக்கச் செய்ய வழிவகுக்கும் எனவும் யாழ்.கட்டளைத்தளபதி தெரிவித்தார்.

கடந்த வருடம் இப்பாடசாலைக்கு 800,000 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள், சீருடைகள், பாடசாலைப் பைகள் மற்றும் சப்பாத்துக்கள் போன்றவற்றை கொழும்பு றோயல் கல்லூரி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மல்லாகம் குளமங்கால் தேவாலய பாதிரியார் வணக்கத்துக்குரிய சுந்தரநாயகம், றோயல் கல்லூரி ஒன்றியத்தின் செயலாளர் மஞ்சு ஆரியரத்தின, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன், றோயல் கல்லூரி தமிழ்ப்பிரிவின் பிரதி அதிபர் எஸ்.கணபதிப்பிள்ளை, 513 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரதீப் டி சில்வா உட்பட அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# புனரமைக்கப்பட்ட அரச கட்டடங்கள் முல்லைத்தீவில் 28, 29 இல் திறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் அழிவுற்ற அரசாங்க கட்டடங்கள்பல மீள நிர்மாணிக்கப்பட்டு எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யு. ஜோன் செனவிரத்னவால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளும் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, அங்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச அரச அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கவுள்ளதாக அமைச்சு தெரிவித்தது. மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம சேவை அதிகாரிகளுக்கென அமைச்சர் தலைமையில் விசேட மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் அமைச்சர் ஜோன் செனவிரத்ன 28 ஆம் திகதி காலை புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள மாவட்டச் செயலாளருக்கான உத்தியோகபூர்வ விடுதியையும் சுற்றுலா விடுதியையும் திறந்து வைக்கவுள்ளார். 29 ஆம் திகதி காலை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கரைதுறைப் பற்று பகுதிகளுக்கு செல்லும் செல்லும் அமைச்சர் அப்பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரதேச செயலாளர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளின் நிரமாணப் பணிகளையும் பார்வையிடவுள்ளார்.

# கல்வி சார ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை கைவிடாது தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க மகா சம்மேளனம் தீர்மானித்துள்ளது. தமது சம்பள உயர்வுப் பிரச்சினை குறித்து நேற்று முன்தினம் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் ஆர்.எம்.சந்திரபால தெரிவித்துள்ளார். சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிககைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கையை வலியுறுத்தி கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் ஆர்ப்பாட்டமும் செய்தனர். இந்த நிலையில் இப்பிரச்சினை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் பங்களிப்பில் தொழில ஆணையாளரது மத்தியஸ்தத்தில் நேற்று முன்தினமும் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாக ஆர்.எம்.சந்திரபால குறிப்பிட்டார்.

# திருமணமான மகளை நிர்வாணப்படுத்திய தந்தை

திருமணமான தனது மகளை வீட்டில் நிர்வாணப்படுத்தி பாலியல் தொந்தரவு மேற்கொண்டதாக தந்தையொருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கொழும்பு - கொம்பனித் தெருவைச் சேர்ந்த இந்நபருக்கு எதிராக பொலிஸார் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தனர். தான் திருமணமான பெண் எனவும் தனது தந்தை மதுவுக்கு அடிமையானவர் எனவும் மேற்படி பெண் கொம்பனித்தெரு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். தமது வீட்டில் வைத்து தனது தந்தை தன்னை நிர்வாணப்படுத்தி பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததாக அப்பெண் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர் தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆவது பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் புரிந்துள்ளதாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் குற்றச் சாட்டை ஒப்புக்கொண்டார். அவருக்கு எதிரான தீர்ப்பை ஜூலை 16 ஆம் திகதி அறிவிப்பதாக நீதவான் கனிஷ்க விஜேரட்ன தெரிவித்தார்.

# மீளாய்வு பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும்

2011 ஆம் வருட உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீளாய்வுக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கு இன்னும் சில தினங்களில் பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான இறுதி நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீளாய்வுக்காக 140,000ற்கும் அதிகமான மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். உயர்தரப் பரீட்சை பெறுபேறு சிக்கல் தொடர்பான வழக்கு இடம்பெற்று வந்ததால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றால் அறிவிக்கப்பட்டதை அடுத்து மீளாய்வுப் பெறுபேறுகளை விரைவில் வெளியிட பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.



புத்தத்தால் கால்களை இழந்த பொதுமக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் செயற்கைக் கால்களை வழங்கும் நிகழ்வு, யாழிலுள்ள ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிலையத்தில் இடம் பெற்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் கால்களை இழந்த ஒருவருக்கு செயற்கைக் கால்களுக்கான அளவுகள் எடுக்கப்படுவதை காணலாம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் இதுவரையில் 2500 பேருக்கான செயற்கை உறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலை பண்பாட்டு மன்றம் அச்சுவேலியில் அங்குரார்ப்பனம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேசத்தில் கலை பண்பாட்டு மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற கலை பண்பாட்டு மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் உப தலைவர் ச.லலீசன் தலைமை தாங்கினார்.

பண்பாட்டு மன்றத்திற்கு தலைவராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், செயலாளர்களாகப் பிரதேசக் கிராம அலுவலர்களான கு.கதிரமலைநாதன், கு.சாந்தரூபன், சி.முருகவேள், பூ.கனிதா ஆகியோரும் பொருளாளராக சு.ஸ்ரீகாந்த் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையுடன் ஆலோசனைச் சபையும் அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பிரதேசத்தின் தனித்துவங்களை வெளிக்கொண்டு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கலை பண்பாட்டு மன்றம் இடைக்காடு, வளலாய், தம்பாலை, அச்சுவேலி உள்ளிட்ட 7 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது.

கிராமிய மட்டத்தில் மறைந்துவரும் கலை பண்பாட்டு வடிவங்களை வெளிப்படுத்தல், மற்றும் பாடசாலை மாணவர்கள்,பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தலுடன் தமிழியல் இசைக்கலை வடிவங்களை மேடையேற்றல், கிராம அலுவலர் ரீதியாக கலைஞர்களை இனம் கண்டு பாராட்டிக் கௌரவித்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் லலீசன் தெரிவித்தார்.

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத்தின் கலை பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் அச்சுவேலியில் நடைபெறவுள்ளதாக லலீசன் மேலும் தெரிவித்தார்.

Grade - 12 | க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள் | 02 | T | II
GIT
G.C.E. (A/L) Examination model Paper
நேரம் : 2 மணித்தியாலம்
கல்வி முரசு

A.J. Nimalrajan
(mcse, ccna)

## பகுதி-1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. கணினியின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
   1. Charles Babbage  2. Blasé Pascal
   3. Remington  4. Howard

2. MARK-1 உருவாக்கப்பட்ட ஆண்டு
   1. 1960  2. 1944
   3. 1935  4. 1900

3. MARK-1 இனால் செய்யக்கூடிய வேலைகள்
   A. தட்டச்சு மட்டும்
   B. கூட்டல் கழித்தல் பெருக்கல் பிரித்தல் செயற்பாடு மட்டும்
   C. தட்டச்சுடன் கூட்டல் கழித்தல் பெருக்கல் பிரித்தல் செயற்பாடுகள்
   1. A மட்டும் சரி  2. B மட்டும் சரி
   3. C மட்டும் சரி  4. எல்லாம் பிழை

4. ENIAC இன் விரிவாக்கம்
   1. Electronic Integrator and computer
   2. Electronical Numerical Integrator and computer
   3. Electronic Numerical Integrator and computer
   4. Electronic Numeric Integrator and computer

5. முதலாவது கணினி பரம்பரைக்குரிய காலப்பகுதி
   1. 1900-1945  2. 1940-1956
   3. 1956-1963  4. 1960-1970

6. கணினிக்குரிய அடிப்படை பகுதிகள்
   1. மையக் கட்டுப்பாட்டு பகுதி, வன்பிரதி எடுப்பான், சுட்டி, Monitor
   2. மையக் கட்டுப்பாட்டு பகுதி, விசைப்பலகை, வன்பிரதி எடுப்பான், ஒலிபெருக்கி
   3. மையக் கட்டுப்பாட்டு பகுதி Monitor வன்பிரதி எடுப்பான், சுட்டி
   4. மையக் கட்டுப்பாட்டு பகுதி Monitor விசைப்பலகை, சுட்டி

7. கணினியின் கட்டமைப்பல ALU (கணித தர்க்க அலகு) தொழிற்பாடு
   1. கணித தர்க்க ரீதியிலான தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதல்
   2. கட்டுப்பாட்டு செயற்பாடுகளில்
   3. சேமிப்பு செயற்பாடுகளில்
   4. வன்பிரதி எடுத்தலைக் கட்டுப் படுத்தல்

8. Processor இனுள் அடங்கும் பகுதிகள்
   1. உள்ளீடு, வெளியீடு பகுதி  2. உள்ளீடு, சேமிப்பு பகுதி
   3. வெளியீடு சேமிப்பு பகுதி  4. கட்டுப்பாடு கணித தர்க்கபகுதி

9. மையக்கட்டுப்பாட்டுப் பகுதியின் (CPU) வேகம் தரப்படும் அலகு
   1. $ms^{-1}$  2. Km/h  3. MHz  4. cm/s

10. PS/2 தரிப்பிடத்தில் இணைக்கக்கூடிய கணினியின் பாகங்கள்
   1.வன்பிரதி எடுப்பான், Scanner  2. Moniter, Scanner
   3. வன்பிரதி எடுப்பான் Moniter  4. விசைப்பலகை, சுட்டி

11 ஒரு Megabyte எதற்குச்சமனாகும்
   1. 8 bits  2. 1024 bytes  3. 1024 K.B  4. 1024 G.B

12. நினைவகத்தின் பகுதிகள் தொடர்பான கூற்றில் சரியானது
   A. Cache memory ஐக் கொண்டது
   B. Random Access Memory ஐக் கொண்டது
   C. Read Only Memory ஐக் கொண்டது
   1. A B சரி  2. B C சரி
   3. A C சரி  4. A B C சரி

13. மென்பொருட்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும் முறை
   1. Utilities, Operating software
   2. Application, system software
   3. Application programme, Operating system
   4. Utilities, Physical devices

14. வலைப்பின்னலின் ஒழுங்கமைப்பு எது?
   1. Star  2. Ring  3. Bus  4.மேற்கூறியஎல்லாம்

15. தொடர்பாடலுக்காக வலைப்பின்னலில் பயன்படுத்தப்படும் வன் பொருள் எது?
   1. Micro phone  2. Sound box
   3. Modem  4. Head phone

16. 3.5″ floppy இன் கொள்ளவு யாது?
   1. 1 G.B  2. 100KB
   3. 1MB  4. 1.44MB

17. கணினி வலைப்பின்னலுடன் தொடர்பற்ற சொல்
   1. URL  2. IP Address  3. Server  4. PS/2 Port

18. சுட்டியை எதனுடன் இணைக்க வேண்டும்?
   1. விசைப்பலகை  2. Moniter  3. CPU  4. மின்சாரம்

19. 10 எனும் தசம எண்ணினை அடி இரண்டில் எழுதும் போது சரியானது
   1. $10_2$  2. $1010_2$  3. $0101_2$  4. $1111_2$

20. எண்களினை அடி 8இல் எழுதும் போது அழைக்கப்படுவது
   1. Binary  2. Decimal
   3. Octal  4. Hexadecimal

21. $11001010_2$ இன் MSD, LSD முறையே
   1. 1,0  2. 0,1  3. 1,1  4. 0,0

22. $101_2$ X $11_2$ ஆனது
   1. $1011_2$  2. $1001_2$  3. $1000_2$  4. $1111_2$

23. வலைப்பின்னலின் நன்மையாக கருதமுடியாதது எது?
   1. ஒரே நேரத்தில் பலர் ஒன்றாக சேர்ந்து வேலை செய்யமுடியும்
   2. ஒரு கணினியிலுள்ள மென்பொருள் தகவல்களை ஏனைய கணினிகளும் பயன்படுத்தலாம்
   3. வளங்களை பகிர்ந்து கொள்ளலாம்
   4. கணினிகளின் பாதுகாப்பு கடினம்

24. நகரங்களுக்கு இடையிலான வலையமைப்பு வகை எது?
   1.LAN  2. MAN  3. WAN  4. மேற்கூறியஎல்லாம்

25. கணினியின் தொடர்பாடல் பிரயோகங்களாக கருதக்கூடியவை
   1. இணையம்  2. மின்னஞ்சல்  3. ATM  4. எல்லாம் சரி

26. Modem தொடர்பான கூற்றுகளில் சரியானது
   A. Digital சமிஞ்சையை Analog சமிஞ்சையாக மாற்றும்
   B. Analog சமிஞ்சையை Digital சமிஞ்சையாக மாற்றும்
   1. A மட்டும்சரி  2. B மட்டும் சரி
   3. A,B இரண்டும் சரி  4. A,B இரண்டும் பிழை

27 கணினியின் தொழிற்பாட்டினை நிறுத்துதல் தொடர்பான கூற்றுகளில் சரியானது
   A. இது இயங்கிக் கொண்டிருக்கும் கணினியின் தொழிற்பாட்டினை நிறுத்தும் கட்டளையாகும்
   B. Operating system windows ஆக இருப்பின் shut down எனும் கட்டளை காணப்படும்
   C. Operating system windows XP ஆக இருப்பின் Turn off எனும் கட்டளை காணப்படும்
   1) A,B மட்டும் சரி  2) B,C மட்டும் சரி
   3) A,C மட்டும் சரி  4) A,B,C எல்லாம் சரி

28. தரவுகள் சேமிக்கப்படும் போது 0,1 (binary system) முறையில் சேமிக்கப்படுகின்றது என்பதனை கூறியவர்
   1.Blaise Pascal  2. Ada
   3. Charles Babbage  4. Abacus

29. இயந்திர மொழியில் (machine Language) 0, 1 இன் கருத்து
   1.on, off  2. off, on  3. on, on  4. off, off

30. Nibbles என்பது
   1. 2 bits  2. 4 bits  3. 8 bits  4. 16 bit

31. பின்வருவனவற்றுள் உள்ளீடாகவும் வெளியீடாகவும் தொழிற்படும் கருவிகள் எவை?
   1) Floppy, Pinter  2) CD, Modem
   3) B மட்டும் சரி  4) மூன்றும் சரி

32. பிரயோகப் பொதிகளை (Application Software) களை தாக்கக் கூடிய Virus வகை எது?
1) macro virus 2) boot cirrus
3) file virus 4) anti virus

33. 4817 என்ற இலக்கத்தை Type செய்வதற்கு எத்தனை bytes தேவைப்படும்
1) 4 2) 8 3) 128 4) 16

34. பின்வருவனவற்றுள் Anti Virus software ஆக அமைவது எது?
1) Trojan 2) Beast
3) Scold 4) Nimda

35. CPU இல் காணப்படுகின்ற Mother board ஆனது
1) மென்பொருள் 2) மென்மின் சுற்று
3) வன் பொருள் 4) வன் மின்சுற்று

36. Charles Babbage இன் எந்தப் படைப்பானது கணினி உருவாக்கத்திற்கு துணைபுரிந்தது
1) ENIAC 2) Difference engine
3) Analytical engine 4) UNIVAC

37). Mouse பின்வரும் எந்தப் பாகத்துடன் இணைக்கப்படுகின்றது.
1) Key boar 2) monitor 3) speaker 4) CPU

38. Vacuum tube காலம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற கணினிக் காலம் எது?
1) 1979 - இன்றுவரை 2) 1959 – 1963
3) 1964 – 1979 4) 1951 – 1958


39. கணினியின் மிகச் சிற்ய அலகுக் கூறாகக் காணப்படுவது
1) bit 2) byte
3) megabyte 4) tiga byte

40. 4th generation computer காலத்தில் ஆயிரக்கணக்கான ICC (Interacted Circuit) செய்ய வேண்டிய கருமத்திற்குப் பதிலாக ஒரு நுட்பமான கருவி கண்டு பிடிக்கப்பட்டது அது
1) Micro processor 2) GUI
3) Micro Chip 4) Transistor

பகுதி-11

எல்லா வினாக்களுக்கு விடை தருக

01 அ. தரவு தகவல் எனும் பதங்களை விளக்குக.
ஆ. பின்வரும் கணினியின் வரிப்படத்தின் உதவியோடு கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக




1. A,B,C,D,E என்பவற்றைப் பெயரிடுக
2. A,B,C,D,E இன் தொழிற்பாடுகளை சுருக்கமாக விளக்குக
3. B,C,E என்பதற்கு இரண்டு உதாரணங்கள் வீதம் தருக

| இயல்புகள் | வளர்ச்சிக்கட்டம் | | | |
|---|---|---|---|---|
| | 1 வது | 2 வது | 3 வது | 4 வது |
| காலப்பகுதி | ........1...... | ........2........ | 1944-1971 | ......3........ |
| பயன்படுத்திய தொழிநுட்பம் | ........4...... | டிரான்சிஸ்ரர் | ...5......... | ......6........ |
| வேகம் | 1 | ........7......... | ...... 8... | 1,000,000.777 |
| வெளியக சேமிப்பு | Cards | ........9.......... | ......... 10..... | Mass storage |

4. Dot matrix, Laser வன்பிரதி எடுப்பான்களின் இயல்புகள் இரண்டு வீதம் தருக

2. a கணினியின் வளர்சிக்கட்டங்கள் தொடர்பான அட்டவணையை பூர்த்தி செய்க

b. 1. கணினி பாகுபடுத்தும் முறையை பயன்படுத்தி பாகுபடுத்திக்காட்டுக

2. பின்வரும் சுருக்கங்களை விரிவுபடுத்துக
1. RAM 2. ROM
3. LCD 4. CRT 5. OS

**3. LCD Monitor இனை CRT Monitor இன்** இயல்புகளுடன் ஒப்பிடுக

3 a. கணினி வலைப்பின்னலின் நன்மை , தீமைகள் 3 வீதம் தருக
b. கணினி வலைப்பின்னலின் மூலகங்களைத் தருக

c. கணினி வலைப்பின்னலின் ஒழுங்கமைப்புகள் ( topology) 3 இனைத்தெரிவு செய்து அமைப்பினை வரைபடம் மூலம் காட்டுக

d. கணினி வலைப்பின்னலின் வகைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

4. a. பின்வரும் தசம எண்களினை அடி 2, 8, 16இல் தருக
1. 50 2. 175 3. 250

b. பின்வரும் செயற்பாடுகளினை பூர்த்தி செய்க

| 1. 1010+ | 2. 1011- | 3. 101x |
|---|---|---|
| 101 | 110 | 11 |
| ________ | ________ | ________ |


c. பின்வரும் எண்களைத் தசமத்திற்கு மாற்றுக
1. $1000_2$ 2. $1234_8$ 3. $4D2_{16}$

d. விசைப்பலகையிலுள்ள எண் எழுத்து குறியீடுகளை உணர்த்தும் முறைகள் 2 தருக

5. a. பின்வரும் Logic gate இற்கான குறியீடுகளை வரிப்படம் மூலம் காட்டுக
1. Not gate 2. AND gate 3. OR gate

b. பின்வரும் logic gate இற்கான விளைவினைக் காண்பதற்கான Truth table இனை ஒழுங்கு படுத்துக

c.




X இனைக் காண்க.

# "பிரணாப்" பின் வெற்றிடம் எப்பொழுதும் உணரப்படும்



(புதுடில்லி)

குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் பிரணாப் முகர்ஜி காங்கிரஸ் கட்சிப் பணிகளிலிருந்து நேற்றுமுன்தினம் விடைபெற்றார். முகர்ஜி சிறந்த மனிதர். அவரின் வெற்றிடத்தை நாங்கள் எப்போதும் உணருவோம் என்று பிரதமர் மன்மோகன் சிங்கும், நற்பண்பாளர், அவருக்கு கிடைக்கும் ஆதரவு அவரின் தகுதி திறமைக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் புகழாரம் சூட்டினர்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சிறப்புக் கூட்டம் கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பிரதமர் மன்மோகன் சிங், பிரணாப் முகர்ஜி, ஏ.கே. அந்தோனி, அம்பிகா சோனி, பி.கே. ஹரிபிரசாத், பொதுச்செயலர் ராகுல் காந்தி; அகமது படேல், ஜனார்த்தன் துவிவேதி உள்பட 18 உறுப்பினர்களும் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் உள்ளிட்ட 12 நிரந்தர அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ள மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் பிரியாவிடை அளித்தனர்.

## பிரதமர் மன்மோகன் புகழாரம்

பிரணாப் அனைவராலும் மதிக்கப்படும் நபர். குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதால் அமைச்சரவையில் இருந்து விலகும் அவரது வெற்றிடத்தை நாங்கள் எப்போதுமே உணருவோம் என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்

குடியரசுத் தலைவர் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் பிரணாப் முகர்ஜி வெற்றி பெறுவார். நாட்டின் அடுத்த குடியரசுத் தலைவராக அவர் பொறுப்பேற்பார் என நம்புகிறேன். காங்கிரஸ் வேட்பாளராக மட்டுமின்றி, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்ட வேட்பாளராகவும் பிரணாப் விளங்குகிறார். கூட்டணிக்கு வெளியிலும் அவருக்குக் கிடைக்கும் ஆதரவு பிரணாபின் தகுதி, நற்பண்புகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் ஆகும். அவருக்கு காங்கிரஸ் சார்பில் வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன் என சோனியா காந்தி தெரிவித்தார்.

# மெரினா கடற்கரையில் சிக்கிய ரொக்கெட்லோஞ்சர்

(சென்னை)

உலகிலேயே மிகவும் நீளமான இரண்டாவது கடற்கரை எனப் புகழ் பெற்றது சென்னையிலுள்ள மெரினா கடற்கரை. தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றானதும் சென்னைவாசிகளின் பொழுதுபோக்குத் தலங்களில் முக்கியமான இடங்களில் ஒன்றானதுமான மெரினா கடற்கரை பலரையும் வசீகரிக்கும் இடமாகும்.

கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை இளைஞர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது மணலில் ஏதே ஒன்று புதைந்திருந்ததை அந்த இளைஞர்கள் கண்டு பிடித்தனர்.

அது வித்தியாசமான பொருளாக இருக்கவே, மெரினா கடற்கரை பொலிஸாரிடம் தெரிவித்தனர். அவர்கள் வந்து ஆய்வு செய்ததில் அது ரொக்கட் லோஞ்சர் கருவி என்பது உறுதியானது. இதனால் அதிர்ச்சிக்குள்ளான மெரினா கடற்கரை பொலிஸார், இதுகுறித்து உயரதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர்.

மேலும், அபாயகரமான ரொக்கட் லோஞ்சர் கருவி மக்கள் நடமாட்டம் மிகுந்த மெரினா கடற்கரைக்கு எப்படி வந்தது என்பது குறித்து தீவிர விசாரணையில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# ஜெயலலிதாவின் அழைப்பிற்கு காத்திருக்கும் எஸ்.வி.சேகர்



(சென்னை)

அ.தி.மு.க.வில் சேருவதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் அழைப்புக்காக காத்திருப்பதாக நடிகர் எஸ்.வி. சேகர் தெரிவித்துள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய அவர்,நான் விரும்பி சேர்ந்த கட்சி அ.தி.மு.க.தான். 10இல் குரு வந்தால் பதவி பறிபோகும் என்பார்கள். அது என் வாழ்க்கையில் நடந்தது.

எந்தப் பலனையும் எதிர்பார்க்கவில்லை. அரசியலில் நேர்மையாக இருப்பேன். அ.தி.மு.க.வில் சேருவதற்காக விருப்பம் தெரிவித்து முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கடிதம் கொடுத்துள்ளேன். அவருடைய அழைப்புக்காக எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கிறேன்.

பழைய காலத்தில் பள்ளிக்கூடங்களில் ஆன்மீகம், ஒழுக்கத்தைப் பாடமாக நடத்தி வந்தார்கள். ஆனால் இப்போது விளையாட்டைக் கற்றுத் தருகிறார்கள். இதனால் ஆன்மீகம் தழைத் தோங்காமல் போய்விட்டது. படித்து விட்டால் யார் காலிலும் பதவிக்காக விழலாம் என்ற காலம் வந்து விட்டது. அந்த மனோபாவம் மாறவேண்டும். பெற்றோர்களை மதிக்க வேண்டும். வளர்ந்து வரும் முதியோர் இல்லங்களைத் தடுக்க வேண்டும். தெய்வ நம்பிக்கை இருக்கும் வரை யார், யார் காலிலும் விழ வேண்டியது இல்லை என்றார்.

# சொத்துக் குவிப்பு வழக்கை தொடர்வதற்கு அனுமதி

(புதுடில்லி)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கை தொடர்ந்து நடத்த உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

தாங்கள் கேட்ட ஆவணங்களைத தராததால் பெங்களூர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு தடைவிதிக்க வேண்டும் என்று சசிகலா சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் இதில் தலையிட உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

இதையடுத்து பெங்களூர் நீதிமன்றத்தில் விசாரணை தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிகிறது.

# ஜனாதிபதித் தேர்தல் போட்டி பிரணாப் ஆதரவு கேட்கவில்லை கூறுகிறார் அத்வானி

(புதுடில்லி)

ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் பிரணாப்முகர்ஜி தன்னைத் தொடர்பு கொண்டு பேசினார். ஆனால் ஆதரவு எதுவும் கேட்கவில்லை என பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி தெரிவித்தார்.


பிரணாப் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் பிரதமர் மன்மோகன் சிங் தொலைபேசியில் பேசினார். பின்னர் பிரணாபும் பேசினார். ஆனால், தான் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பதாக மட்டுமே கூறினார்.

மேலும் 1970 களில் நாடாளுமன்றத்தில் இருவரும் இணைந்து செயல்பட்டது குறித்து நினைவு கூர்ந்தார். ஆனால் தேர்தலில் ஆதரிக்குமாறு கோரிக்கை எதுவும் விடுக்கவில்லை என அத்வானி தெரிவித்தார்.



ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜி அரசியல்வாதியாக, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக தனது கடைசி செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்றதுடன் பத்திரிகையாளர்களுக்கு 'போஸ்' கொடுப்பதையும் காணலாம்.

# ஒருமுறை ஜனாதிபதியாக பதவி வகித்ததே போதும் என்கிறார் கலாம்



(இந்தூர்)

நாட்டின் ஜனாதிபதியாக ஒருமுறை பதவி வகித்து விட்டேன். அந்த அனுபவமே எனக்குப் போதுமானது என்று அப்துல் கலாம் கூறியுள்ளார். மத்திய பிரதேசம் இந்தூரில் சூரிய ஒளி, காற்றாலை மூலம் மாற்று எரிசக்தி தயாரிப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கலாம் கூறுகையில்; நீங்கள் ஏன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை என்பதுதான் பலருடைய கேள்வியாக உள்ளது. நாட்டு நலன் கருதும் தலைவரை அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் தேர்வு செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். நான் ஏற்கனவே ஒருமுறை ஜனாதிபதியாக இருந்து போதிய அனுபவத்தை பெற்று விட்டேன். எனவே மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்க வேண்டும் என்றார் கலாம்.

# மதுரை ஆதீன மடத்தில் பொலிஸார் சோதனை

(மதுரை)


மதரை ஆதீன மடத்தில் யானைத்தந்தம் புலித்தோல் உள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டதனை அடுத்து நேற்றையதினம் பொலிஸாரும் வனத்துறையினரும் சோதனையில் ஈடுபட்டனர்.

சோதனை செய்தவதற்கான நீதிமன்ற அனுமதியைக் காட்டியதும், உள்ளே இருந்த நித்தியானந்தாவும், மதுரை ஆதீனம் அருணகிரிநாதரும் சிறிது நேரம் ஆலோசனை நடத்திவிட்டு பின்னர் அனுமதித்தனர். அனைத்து இடங்களிலும் பொலிஸாரும், வனத்துறையினரும் சோதனை நடத்தினர்.

மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் சோதனை என்று பொலிஸார் வந்ததும், தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி இரண்டாவது மாடியில் தரையில் படுத்துக்கொண்டார். எனினும் பொலிஸார் அவரிடம் விசாரணையை நடத்தினர். நித்தியானந்தா முதல் மாடியில் உள்ள அறையில் வெளியில் வராமல் தங்கியிருந்தார்.

மதுரை மாவட்ட இந்து மக்கள் கட்சித் தலைவர் சோலைக்கண்ணன் என்பவர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் கொடுத்திருந்த புகார் மனுவில், மதுரை ஆதீன மடத்தில் புனித நீர் என்ற பெயரில் போதை ஏற்றும் நீர் கொடுக்கப்படுகிறது. யானைத் தந்தம், புலித்தோல் அங்கு சட்டத்திற்கு விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆண்களும், பெண்களும் ஆபாசமான முறையில் நடந்துகொள்கின்றனர் என்று கூறியிருந்தார். இந்த புகாரின் அடிப்படையில் நித்தி, ரஞ்சிதா மேல் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

# ஜேர்மன் போர்க்கப்பல்களில் விஷ வாயுக்கசிவு கண்டறிவு



ஜேர்மனுக்கு சொந்தமான 5 புதிய போர்க்கப்பல்களில் விஷவாயுக் கசிவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப்போர்க் கப்பல்கள் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் கீல் என்ற இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

ஜேர்மனியின் கப்பற்படை துணைத் தளபதி ஆக்சல் ஷிம்ஃப், அரசியல் பிரமுகர் மற்றும் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று போர்க் கப்பலை சுற்றிக் காட்டும் போதே விஷ வாயுக் கசிவு இருப்பது தெரியவந்தது.

இதுதவிர வழக்கமான மாசுப் பரிசோதனையின் போது "ஃபார் மால்டிஹைட்" என்ற விஷ வாயுக் கசிவு இருப்பதும் கண்டுபிடிக் கப்பட்டது.

இதுகுறித்து இராணுவத்திற்கான நாடாளுமன்ற ஆணையர் ஹெல்முட் கோனிங்ஷால் விசாரணை நடத்தி வருகின்றார்.

ஏற்கனவே இந்தப் போர்க் கப்பல்களில் பாதுகாப்புக் கருவிகள், மென்பொருள் மற்றும் குளிர்பதன வசதி போன்றவை மாற்றப்பட வேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்குறைகள் விரைவில் சரிசெய்யப்படும் என்று பாதுகாப்புத் துறை நிபுணரான ஹேன்ஸ்பிட்டர் பார்டெல்ஸ் தெரிவித்துள்ளார்.

# முழுமையான அமைதியை ஏற்படுத்துவதே முதற்பணி

## எகிப்தின் புதிய ஜனாதிபதி தெரிவிப்பு



(கெய்ரோ)

எகிப்தில் பூரணமான அமைதியை ஏற்படுத்துவதே தனது முதற்பணியாக இருக்குமென புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி முகமது மூர்சி தெரிவித்துள்ளார்.

எகிப்தில் கடந்த 30 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவி வகித்து வந்த ஹோஸ்னி முபாரக், மக்கள் போராட்டத்தின் விளைவாக பதவி விலகினார்.

இதனையடுத்து முபாரக் மீது போராட்டக்காரர்களை கொன்று குவித்தது, ஊழல் போன்ற வழக்குகள் போடப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது முபாரக் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டு கோமா நிலையில் உள்ளார்.

இந்நிலையில் எகிப்தில் சமீபத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில், முகமது மூர்சி (வயது-60) வெற்றி பெற்றுள்ளார்.

இவர் பதவியேற்று மக்களிடையே முதன் முதலாக பேசினார். அப்போது, நான் அனைத்து எகிப்தியர்களுக்கு ஜனாதிபதி யாரிடமும் பாரபட்சம் காட்ட மாட்டேன்.

மதம், இனம் தாண்டி எகிப்தில் முழு அமைதியை ஏற்படுத்துவதே எனது இலட்சியம் அதற கேற்றவாறு அமைச்சரவை பணியை தொடங்கி விட்டேன் என்று தெரிவித்தார்.


மேலும் தேர்தல் முடிவு வெளியானதும் முகமது முர்சியுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

அப்போது அவர், மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் உங்களுடைய பணி சிறப்பாக அமைய வேண்டும். எகிப்து மக்களுக்கும், உங்களுக்கும் அமெரிக்கா எப்போதும் ஆதரவு கொடுக்கும் என்று கூறினார்.

அதேபோல தேர்தலில் தோல்வி அடைந்த முன்னாள் பிரதமர் அகமது ஷபிக்குடனும் ஒபாமா பேசினார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் காட்டுத் தீ; 11ஆயிரம் மக்கள் வெளியேற்றம்



அமெரிக்காவில் உள்ள கலேராடோ பகுதியில் மிக அடர்ந்த காடுகள் இருப்பதுடன், இப் பகுதி சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது.

தற்போது இந்த காட்டுப் பகுதியில் சுமார் 2,500 ஏக்கர் அளவுக்கு பயங்கரமாக தீப்பற்றி எரிவதாக கூறப்படுகிறது, இதனால் அந்தப் பகுதி முழுவதும் புகைமண்டலமாக காட்சி அளிக்கிறது.

எனவே அந்தப்பகுதியை சுற்றியுள்ள 11 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தீயை அணைக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த 23ஆம் திகதி மட்டும் அமெரிக்காவில் பல்வேறு இடங்களில் காட்டுத் தீ விபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துனிஷியாவிற்கு தப்பிச் சென்ற லிபிய முன்னாள் பிரதமர் கைது



லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி, பொதுமக்களின் போராட்டத்தின் போது படுகொலை செய்யப்பட்டார்.

அவரது ஆட்சி வீழ்ந்ததைத் தொடர்ந்து பிரதமராக பதவி வகித்த அல்பக்தாதி அலி அல் மக்மூத் பக்கத்து நாடான துனிஷியாவுக்கு தப்பிச் சென்று அங்கு தஞ்சம் புகுந்தார்.


கடாபி கொல்லப்பட்டதும் லிபியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரது ஆட்சியில் அநியாயம் செய்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் விசாரணை நடக்கிறது.

இந்நிலையில் துனிஷியாவில தஞ்சம் அடைந்து இருந்த முன்னாள் பிரதமர் மக் மூத்தை விசாரணைக்காக தங்களிடம் ஒப்படைக்கும்படி அந்நாட்டு அரசிடம் லிபியா கோரிக்கை விடுத்தது.

அதை ஏற்றுக்கொண்ட துனிஷியா நேற்று முன்தினம் அவரை லிபியாவிடம் ஒப்படைத்தது. மக் மூத்தை அரசு ஹெலகொப்டர் மூலம் துனிஷ் நகரில் இருந்து லிபியாவுக்கு அனுப்பி வைத்தது.

அதன் பின்பு அவரை லிபியா அரசு கைது செய்து திரிபோலியில் உள்ள சிறையில் அடைத்தது. இந்தத் தகவலை தற்போதைய இடைக்கால அரசின் இராணுவ அமைச்சக அதிகாரி மொகமது அல்- அகர்வால் தெரிவித்துள்ளார்.

# பட்டம் பெறுவதில் சாதனை



ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்வது என்பதே நம்மில் பலருக்கு குதிரைக் கொம்பாக அமைந்து விடுகின்றது.

எனினும், அமெரிக்காவின் Michigan னைச் சேர்ந்த நபர் ஒருவர் 29 துறைகளில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

Michigan னின் Kalamazoo என்ற இடத்தைச் சேர்ந்த 71 வயதான Michael Nicholson என்பவர், 29 பட்டப் படிப்புக்களை பூர்த்தி செய்துள்ளார்.

புதிய புதிய துறைகளில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வது மிகவும் சுவாரஸ்மானது என MichaelNicholson குறிப்பிட்டுள்ளார்.

ஒரு இளநிலைப் பட்டம், 22 முதுநிலைப் பட்டம், மூன்று விசேட நிபுணத்துவ பட்டம், ஒரு கலாநிதி பட்டம் ஆகியவற்றை Michael Nicholson இதுவரையில் பெற்றுள்ளார்.

அநேகமான பட்டங்கள் கல்வித்துறை சார்ந்தவை. வீட்டு முகாமைத்துவம், கல்வி தலைமைத்துவம், நூலக முகாமைத்துவம், பாடசாலை உளவியல் போன்ற பல்வேறு துறைகளில் பட்டம் பெற்றுள்ளார்.

MichaelNicholson தற்போது முதுநிலைப் பட்டக் கல்வியை கற்று வருகின்றார்.

குறைந்தபட்சம் 33, 34 பட்டங்களை பெறுவதே தமது இலக்கு என இவர் கூறுகிறார்.

# பாலத்திலிருந்து பஸ் சரிந்ததில் 19பேர் பலி; 55பேர் படுகாயம்

(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்க தலைநகரமான ஜோகன்னஸ்பேர்க்கின் அருகிலுள்ள மேயர்டன் நகரில் பாலத்திலிருந்து பஸ் சரிந்து விபத்துக்குள்ளானதில் பயணிகள் 19 பேர் பலியாகியுள்ளனர்.



மேலும் 55 பேர் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்களில் 21 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

பாலத்தின்மேல் சென்றுகொண்டிருந்த பஸ், திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, நிலை தடுமாறி பாலத்தின் பக்கவாட்டு சுவர்களை உடைத்துக்கொண்டு அருகிலுள்ள பள்ளத்தில் கவிழ்ந்துள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

# அசாஞ்சே நாடுகடத்தலுடன் அமெரிக்கா தொடர்பில்லை

## என்கிறது அவுஸ்ரேலியா

சர்ச்சைக்குரிய விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜுலியன் அசாஞ்சே நாடு கடத்தப்படுவதில் அமெரிக்காவின் திட்டங்கள் எதுவும் இல்லை என அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.

லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அசாஞ்சே அரசியல் புகலிடம் கோரியுள்ள நிலையில், அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் நாடு கடத்துவதற்கு எதிரான அசாஞ்சேயின் மேன்முறையீட்டை லண்டன் நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இதனையடுத்து அமெரிக்க தூதரக இரகசிய ஆவணங்களை வெளியிட்டமைக்காக மரண தண்டனை விதிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அவர் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சாவகச்சேரியில் வர்த்தக நடவடிக்கை சகல குறைபாடுகளுக்கும் விரைவில் தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி வர்த்தக சங்கக் கட்டடத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது சாவகச்சேரி நகர் தொடர்பிலான தேவைகள் மற்றும் குறைபாடுகள் குறித்து சங்கத்தினர் அமைச்சரிடம் எடுத்து விளக்கினர்.

இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர், கூடிய விரைவில் இத்தேவைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

# தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் 59 பேர் வடக்கில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்திலுள்ள 59 பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கான ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் காலை 9.00 மணிக்கு அலரிமாளிகையில் நடைபெறவுள்ள வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

நியமனம் பெறும் ஆசிரியர்கள் ஆண்கள் கறுப்பு நிற நீள் காற்சட்டையும் வெள்ளை நிற சேட்டும் கழுத்துப் பட்டியும் அணிவதுடன், பெண்கள் சேலை அணிந்தும் சமுகமளிக்க வேண்டும். இவ் ஆசிரியர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## பணிப்பாளரை...

யாழ். மருத்துவ சங்கத்தினர் இன்று சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து கோரிக்கையை கையளிக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## கணினிமய...

எதிர்ப்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். வாக்காளர் பெயர்ப்பட்டியல்களை கணினிமயப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு மிகவும் இலகுவாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முறிகண்டியில்...

விரட்டியடித்ததாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

திருமுறிகண்டி பகுதி மக்களை மீளவும் அவர்களது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்த்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதேவேளை, அம்மக்களது சுயவிருப்பத்தின் பேரிலேயே அவர்கள் மீள்குடியேற்றத்துக்காக அழைத்து வரப்பட்டார்கள் என்றும் அவர்களை நிர்ப்பந்திக்கும் விதத்தில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருமுறிகண்டிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்துக்காக அழைத்துவரப்பட்ட பொதுமக்களில் சிலர், கடந்த திங்கட்கிழமை இரவு இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் பலவந்தமாக மெனிக்பாம் நலன்புரி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சுவீகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று நேற்றைய தினம் முறிகண்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கேட்ட போதே முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

திருமுறிகண்டியைச் சேர்ந்த குடும்பங்கள் மெனிக்பாம் நலன்புரி முகாமில் தங்கியிருந்த நிலையில் அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மேற்படி மீள்குடியேற்றம் தொடர்பில் அறிவிப்பதற்காக உதவி அரசாங்க அதிபர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் அகதிகளுக் கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கடந்த 21 ஆம் திகதி மெனிக்பாம் முகாமுக்குச் சென்றனர்.

இதன்போது, திருமுறிகண்டியைச் சேர்ந்த 47 குடும்பங்கள், மீள்குடியேறுவதற்கான தங்களது விருப்பத்தைத் தெரிவித்தன. இதன் பிரகாரம் கடந்த 23 ஆம் திகதி மேற்படி 47 குடும்பங்களும் செட்டிக்குளம் மெனிக்பாம் முகாமிலிருந்து அழைத்துவரப்பட்டு திருமுறிகண்டிப் பாடசாலையில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டனர். அத்துடன், அவர்களில் 29 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களது சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றமும் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், ஏனைய 18 குடும்பங்களுக்கும் மீள்குடியேறுவதற்காக காணிகள் வழங்கப்பட்ட போதிலும் அவர்கள் அக்காணிகளில் குடியேற மறுப்பு தெரிவித்தனர். அவர்கள் தங்களது சொந்தக் காணிகளிலேயே தம்மை மீள்குடியேற்றுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இவர்கள், பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருந்ததினால் பாடசாலை வகுப்புக்கள் எவையும் நடைபெறவில்லை. அத்துடன், அவர்களது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்த்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதனாலும் பாடசாலை தொடர்ந்து இயங்க வேண்டி இருந்ததினாலும் இது தொடர்பான போதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னரே அம்மக்கள் மீளவும் மெனிக்பாம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

எனினும், இம்மக்களை மீளவும் அவர்களது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்த்துவதற்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்மக்கள் தாக்கப்பட்டார்கள் என்பதிலோ அல்லது பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பதிலோ எவ்வித உண்மையும் இல்லை என்று அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.

# பிரதிச் செயலாளராக விக்கினேஸ்வரன்

(கொழும்பு)

வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போது வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 2 வருடகாலமாக மாகாண கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி வந்த இவர் நாளை வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

அத்துடன் மாகாண கல்விப் பணிப்பாளரின் வெற்றிடத்திற்கு இதுவரை காலமும் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிவந்த உதயகுமார் பதில் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக்கடிதம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (02)

## கலைஞர்களுக்கு...

நடைமுறைப்படுத்தல் விடயமாக விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா மற்றும் அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜித் கணுகல ஆகியோருடன் பல கலைஞர்கள் பங்குபற்றலுடன் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

## தீயில்...

தீயைப் பற்றவைத்ததன் காரணமாக எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து கிடைத்த தகவலொன்று தெரிவித்தது. (பா)

## காணிகளின்...

பெற்றவர்களுக்கு உரிமம் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்ட மக்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவுடன் இணைந்து காணி உரிமம் தொடர்பாக நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (எஸ்)

# குடாக்கடலில் மீனவர் பிரச்சினை ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலில் இழுவைப் படகுத் தொழில் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்படும் உள்ளூர் மீனவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், யாழ், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், கடற்றொழில் சங்கங்கள் கலந்து கொள்ளவிருந்தன.

எனினும் அந்தத் திகதியில் வேறு ஒரு நிகழ்வு நடைபெறவிருந்ததன் காரணமாக எதிர்வரும் முதலாம் திகதிக்கு இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

குருநகரில் இருந்து செல்லும் றோலர் மீன்பிடி இழுவைப் படகுகள் பூநகரி மற்றும் பாசிக்குடா கடற்பரப்பில் சிறு கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களது தொழில் நடவடிக்கைகளை நாசப்படுத்தி வருவதுடன், கடல் வளத்தையும் அழித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்படி கடற்பரப்பில் இழுவைப் படகுத் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட பல இழுவைப் படகுகளை கடற்படையினர் பிடித்து எச்சரித்து விடுவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# வெடி குண்டைக் கையாண்டமைக்கு போதிய ஆதாரம் இல்லை

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

எஸ்.எல்.ஆர், ஏ.கே 47, எஸ்.எம்.ஜி துப்பாக்கிகள் மற்றும் பல்வேறு வெடிகுண்டு வகைகளை கையாண்டதாகவும் இராணுவத்தினருக்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மூளாய், சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த பொன்னையா சிதம்பரன் (நாதன்) என்ற கூலித் தொழிலாளியான 2 பிள்ளைகளின் தந்தையாரான இவர் 17.05.2009 கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக 19.09.2010 யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கினை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது இவருக்கு எதிரான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஆதாரம் அற்றதென்று கருதி நீதிமன்றால் இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக நிராகரிக்கப்பட்டது.

வேறு சான்று உள்ளதாக என பரிசீலிப்பதற்காக அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் இந்த வழக்கினை ஒத்திவைத்தார். (எஸ்)

## பரிந்துரைகளை...

நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பற்றி தாங்கள் இதுவரை முடிவு எடுக்க வில்லை என்றும் அதற்கு பின்னரே அந்த சிபாரிசுகள் அமுலாக்கப்படும் என்றும் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவது பற்றிய அமைச்சரவை நியமித்த செயலணியின் தலைவராக வீரதுங்க இப்போது செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிறு ஆங்கில தினசரி தவறான கருத்தை உணர்த்தக் கூடிய வகையில் தகவல்களை ஜோடித்து இவ்விதம் எழுதியிருப்பதாக லலித் வீரதுங்க சுட்டிக்காட்டினார்.

இந்தப் பத்திரிகையில் வெளியிட்ட ஆவணம் வொஷிங்டன் சென்றிருந்த எமது தூதுக்குழுவின் கவனத்தை ஈர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் என்றும் அவர் கூறினார்.

குறிப்பிட்ட ஆவணத்தை அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்தார். தற்போது தமது தலைமையிலான செயலணி நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை ஆராய்ந்து வருவதாகவும் இந்த சிபாரிசுகள் காலகிரமத்தில் அமுலாக்கப்படுவதற்கு முன்னர் நாம் அதனை அறிவிப்போம் என்றும் ஜூலை மாத நடுப்பகுதியில் இடைக்கால செயற்பாடொன்றை அமுலாக்க உத்தேசித்திருப்பதாகவும் அவர் கூறினார்.


## தனியார்....

சுட்டிக்காட்டினார். வடக்கில் முகாம்களை அமைப்பதற்கு தேவையான காணிகளை மாகாண ஆளுநரிடம் கோரியுள்ளதாக தெரிவித்த அவர், உரிய இடத்தில் பொருத்தமான காணிகள் கிடைத்தவுடன் எஞ்சியுள்ள 400 வீடுகளையும் உரிமையாளர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வடக்கின் பாதுகாப்பு தேவைகளை கருத்திற் கொண்டு 1995 ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு படையினர் நிலை கொண்டுள்ளனர். அப்போது தேவைகளைக் கருத்திற்கொண்டு பொறுப்பேற்ற வீடுகளில் 50 வீதமான வீடுகள் மீளவழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று தற்போது 400 வீடுகளிலேயே இராணுவத்தினர் உள்ளனர். இந்த வீடுகளுக்கான மாதாந்த கொடுப்பனவு உரிமையாளர்களுக்கு அரசாங்கம் வழங்கி வருகின்றது.

அதேபோன்று வடக்கின் பாதுகாப்பு நிலைமை கொழும்பு உட்பட நகர்ப் புறங்களைவிட சிறந்ததாக காணப்படுவதுடன் 26 ஆயிரம் இராணுவத்தினர் கடமையாற்றி வந்த நிலையில் அது தற்போது 15 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பு தேவைகளை கருத்திற்கொண்டு தேவைக்கேற்ப படிப்படியாக எஞ்சியுள்ளவர்களை குறைப்பதா இல்லையா என்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மேலும் தெரிவித்தார்.

# குடும்பத்தின் துயரங்கள் மாணவர்களைப் பாதிக்கக்கூடாது




(சாவகச்சேரி)

கல்வி பயிலும் மணவர்களின் மனதினை குடும்ப கஷ்டங்கள் துன்பங்கள் பாதிக்கின்றன. ஆகவே எமது வாழ்வில் பல துன்ப துயரங்களை அனுபவித்தாலும் எமது பிள்ளைகளிற்கு அவற்றை எச்சந்தர்ப்பதிலும் தெரியப்படுத்தக்கூடாது என்பதில் பெற்றோர் உறுதியாக இருக்கவேண்டும். என்று நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கேட்டுக்கொண்டார். தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று காலை 9.00 மணிக்கு நடைபெற்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களிற்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கும் நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் எமது பிரதேசங்கள் கடந்த யுத்த அனர்த்தத்தினால் அடிப்படைத் தேவைகளை இழந்த துர்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டு தற்போது மின்சாரம், வீதிகள் என சரிசெய்யப்பட்டு வருகின்றது. எமது பிரதேச அபிவிருத்தியோடு யாராலும் அழிக்கப்படாத செல்வமாகவும் களவாடப்படாத செல்வமாகவும் கல்விச்செல்வம் காணப்படுகின்றது. இச்செல்வத்தை மாணவர்கள் கற்பதற்கு உள்ள தடைகளை விலக்கி அவர்களை ஊக்குவிக்கவேண்டும். இங்கு மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக வழங்கப்படும் துவிச்சக்கர வண்டிகளினை சரியான முறையில் பராமரிப்பதுடன் இதனை மாணவர்களிற்கு வழங்கும் இந்திய அரசிற்கு நன்றி தெரிவிபதுடன் இவற்றை ஒழுங்கு செய்த கௌரவ அமைச்சர் டகளஸ் தேவானந்தா அவர்களிற்கும் நன்றி தெரிவிக்கிறேன் என தெரிவித்தார். இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீகாந் அவர்களும் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி. சாந்தசீலன், உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி இரகுநாதன், சாவகச்சேரி நகரசபை எதிர்கட்சித தலைவர் எஸ்.அலெக்ஸாண்டர் மற்றும் மாணவர்களின் பெற்றோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் சுமார் 120 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

# வீடு புகுந்து திருட்டு; கோண்டாவிலில் சம்பவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கில் வசிதுவரும் பத்மநாதன் ஜெயக்குமார் என்பவரின் வீட்டில் நேற்று பொறுமதி மிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டின் உரிமையாளர் வழமைபோல் வேலைக்குச் சென்றுவிட்டார். இவரது மனைவியும் வங்கிக்குச் சென்றிருந்த சமயம் இவர்களது வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் பூட்டியிருந்த கதவினை உடைத்து உள்ளே இருந்த 'டிவிடி' பிளயர் மற்றும் றேடியோ செற், வியாபாரம் செய்யவென புதிதாக எடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான புடவைகள் என்பவற்றை திருடிச்சென்றுள்ளதாக குறித்த வீட்டு உரிமையாளர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வீட்டிற்கு அருகில் காலை 9.30 மணியளவில் இரண்டு பச்சை ஓட்டோக்கள் நின்றதாகவும் தாங்கள் அது குறித்து அயல் வீட்டிற்கு உறவினர்களை ஏற்றிவந்த ஆட்டோ என நினைத்து பொருட்படுத்தாது விட்டதாகவும் தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

# வடக்கின் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் முழுமையாக யாழ். காரியாலயத்தின் கீழ்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மற்றும் மன்னார் பகுதிகளின் மதிப்பிட்டுச் செயற்பாடுகள் யாவும் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து யாழ் பிராந்தியத்தின் கீழ் செயற்படவுள்ளதாக யாழ். பிராந்திய மதிபபீட்டுத்திணைக்களப் பணிப்பாளா ஜெயகாந்தன் தெரிவித்துள்ள்ார்.

கடந்த 13 ஆம் திகதி மதிப்பீட்டாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற பிராந்திய மதிப்பீட்டாளர்களுடனான கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் மன்னார் வவுனியா ஆகிய மாவட்டங்களின் மதிப்பீட்டுப்பணிகள் யாவும் அநுராதபுரத்தில் உள்ள ராஜரட்டை பிராந்திக்காரியாலயத்தின் ஊடகாவே மேற்கொள்ளப்பட்டு வந்தது இதனால் தமிழ் மக்கள்பெரும் நெருக்கடிகளை சந்தித்து வந்த நிலையில் எதிர்வரும் 01 ஆம் திகதியில் இருந்து யாழ். பிராந்திய காரியாலயத்தின் ஊடாக குறித்த மாவட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டத்தின் மதிப்பீட்டு பணிகளும் யாழ்பிராந்தியத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது வடமாகாணத்தின் அனைத்து மாவட்த்தின் மதிப்பீட்டுபணிகளும் யாழ்பிராந்தியத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன இதற்காக யாழ் பிராந்தியக் காரியாலயத்திற்கு 5 மதிப்பிட்டாளர்கள் பயிலுனர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தற்பொது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள அலுவலகத்தில் உள்ள சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் மேற் கொள்ளப்பட்டுவருதாகவும் யாழ். பிராந்திய மதிப்பீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார். (02)

# மஹோற்சவகால தெய்வீகப் பேருரை

(திருநெல்வேலி)

மத்தாளோடை அருள்மிகு கருமாரி அம்மன் ஆலயத்தில் நடை பெற்றுவரும் அலங்கார உற்சவப் பெருவிழாக் காலங்களில் ஈழதத்தின் புகழ்பூத்த சைவத் தமிழறிஞர்களின் பேருரைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி இன்று "தாய்மை வழிபாடு" எனும் தலைப்பில் கந்த சத்தியதாசன், நாளை "சமயம் காட்டும் வாழ்வியல்" எனும் தலைப்பில நா.நவராஜ், நாளை மறுதினம் "சமய வாழ்வு" எனும் தலைப்பில் விகடகவி மு.திருநாவுக்கரசு, எதிர்வரும் 30 ஆம் திகதி "கிரியைகளும் பயன்களும்" எனும் தலைப்பில் பொன்.சந்திரவேல், எதிர்வரும் 2 ஆம் திகதி "கருணை காட்டும் கருமாரி" எனும் தலைப்பில் பொன். சுகந்தன் விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். எதிர்வரும் 3 ஆம் திகதி தீர்த்தோற்சவ விழாவன்று "தீர்த்தோற்சவ மகிமை" சிறப்பு வர்ணனையை மதுர கவி காரை எம்.பி.அருளானந்தன் வாழங்கவுள்ளார். (60)

# போலியான கொடி விற்பனை யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் எச்சரிக்கை

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு கடந்த 11.06.2012 முதல் 18.06.2012 வரையான ஒருவார காலத்தில் இடம்பெற்ற கொடிவாரம் 18.06.2012 ஆம் திகதியுடன் நிறைவு பெற்ற பின்னரும் சிலர் போலியான கொடிகளை வழங்கி நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாக எமக்கு ஆதாரபூர்வமான தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. எமது நிறுவனத்தின் இலட்சினை பொறித்த கொடிகளையே நாம் விநியோகித்து நிதியினைப் பெற்றுள்ளோம். அது முற்றிலும் போலியானது என்பதை உறுதியாகத் தெரிவிப்பதோடு, தொலைபேசி ஊடாகத் தகவல் தருமாறும் போலிகளைக் கண்டு ஏமாறாமல் அவதானமாக செயற்படுமாறு ஜெய்ப்பூர் நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

எமது நிறுவனத்தின் இலட்சினை மற்றும் தொடர் இலக்கத்துடன் கூடிய ரிக்கேற்றுக்களும் தற்போது விற்பனையில் உள்ளன. இவற்றை அன்பளிப்புக்களை வழங்கிப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே அன்பளிப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# முடிவுக்கு வந்தது ஊழியர்கள் போராட்டம்

கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று தமது பணிப் பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டுவந்துள்ளனர். அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க மகா சம்மேளனத்திற்கும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளதை அடுத்து பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க மகா சம்மேளனத்திற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. தமது சம்பள உயர்வுப் பிரச்சினையை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டனர். *(மற்றுமொரு செய்தி உள்ளே)*

# நாளொன்றுக்கு மின்சார சபைக்கு 150 கோடி நட்டம்

(கொழும்பு)

டீசலை கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், இலங்கை மின்சார சபை ஒரு நாளைக்கு 150 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார வளத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார். நீர்மின் நிலையங்களை அண்டிய பகுதிகளில் தொடர்சியாக மழை இல்லாத காரணத்தினால் இந்த நிலை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரு மாத காலத்துக்கு இவ்வாறு மழை கிடைக்கா விட்டால், மின்சார உற்பத்தியை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# திருட்டுப்போன விக்கிரகங்கள் யாழ். பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் மீசாலை வடக்கு வேம்பிராய்ச் சந்தி கலட்டி விநாயகர் ஆலயத்தில் இருந்து களவு போயிருந்த உலோகத்தினாலான இரண்டு சுவாமி 'விக்கிரகங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

விநாயகர் மற்றும் சண்டேசுவரா் ஆகிய இரண்டு சுவாமி விககிரகங்களையும் குறித்த ஆலயத்தின் நிர்வாகிகள் யாழ். பொலிஸ நிலையத்தில் நேற்று அடையாளம் காட்டியதனைத் தொடர்ந்து அவை நேற்று பொலிஸாரால் சாவகச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு குறித்த ஆலய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதேவேளை கடந்த பங்குனி மாதம் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை, கணுக்கேணியிலுள்ள கற்பகப் பிள்ளையார் கோவிலில் இருந்தும் பத்து சுவாமி விக்கிரகங்கள் காணாமல் போயிருக்கின்றது. இது குறித்தும பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்த ஆலய நிர்வாகிகளும் நேற்றைய தினம் யாழ். பொலிஸ நிலையத்திற்குத். தமது ஆலய விக்கிரகங்களை அடையாளம் காண்பதற்காக வந்திருந்தனர். எனினும் அந்த ஆலய விக்கிரகங்கள் அவை அல்லவென்று அவர்கள் தெரிவித்தனைத் தொடர்ந்து சாவகச்சேரி கலட்டி விநாயகர் ஆலயத்திற்கு இவ்விக்கிரகங்கள் ஒப்படைக்கப்படவுள்ளது ஏன்பது குறிப்பிடத்தக்கது.

முள்ளியவளை கணுக்கேணி கற்பகப்பிள்ளையார் கோவிலில் இருந்து பஞ்சமுகப் பிள்ளையார் விக்கிரகம், சிவன் அம்மன், நடேசர் அம்மன், சண்டேஸ்வரர், வள்ளி, தெய்வானை, முருகப் பெருமான், பிள்ளையார் உள்ளிட்ட 510 கிலோ கிராம் நிறை கொண்ட உலோக விக்கிரகங்கள் களவு போயிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.